215

1-10-'57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



12 OCT 1957

# செய்திகள்

## ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் விஜயம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் 23-9-57 அன்று சென்னையிலுள்ள மயிலாப்பூருக்கு விஜயம் செய்த சமயம், நகரிலுள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஜகத்குரு அவர்களையும் பட்டத்து இளைய சுவாமிகளையும் நன்கு அலங்கரிக்கப்பட்ட பல்லக்குகளில் அமரச் செய்து பிரதான வீதிகள் வழியாக ஊர்வலமாக அழைத்து வந்தனர். சுவாமிகள் நவராத்திரி பூஜையை மயிலாப்பூரிலுள்ள சம்ஸ்கிருத கலாசாலையில் நடத்தி வருகிறார்கள். சென்னை நகரிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள குழந்தைகள் சுவாமிகளைத் தரிசித்து அவர்களுடைய ஆசிகளைப் பெற நல்ல சந்தர்ப்பம் இது.

## ராஷ்டிரபதி வருகை

மைசூரில் பூதான இயக்கம் சம்பந்தமான வழிமுறைகளை வகுக்க ஒரு மகாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் சென்னை வழியாக மைசூருக்குச் சென்றார். வினோபா பாவே, பிரதமர் நேரு, ஜயப்பிரகாஷ் நாராயண் முதலியோர் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்கள்.

## காந்திநூல் வெளியீட்டு விழா

காந்திஜியின் நூல்களின் முதல் தொகுப்பைத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வெளியீட்டு விழாவை, காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ தேபர் ஆரம்பித்துவைத்தார். இன்னும் 14 தொகுப்புகள் வெளிவர இருக்கின்றனவாம். காந்தி நினைவு நிதியின் தமிழ் நாட்டுக் கிளையின் ஆதரவில் இந்த நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த முதல் தொகுப்பின் விலை ரூ. 7-8-0. காந்திஜியின் நூல் நாட்டு மக்களிடையே பரவ இந்த விலை சற்று அதிகமாகவே படுகிறது. வாசகசாலைக்கென ஒருவிதமான பதிப்பும் எல்லாரும் வாங்கிப் படிக்கக்கூடிய விலையில் ஒரு பதிப்புமாக இதைச் செய்திருந்தால் காந்திஜியின் நூல் பட்டித் தொட்டிகளில் எல்லாம் பரவ வாய்ப்பு இருக்கும். கிறிஸ்துவ இலக்கியக் கழகமும் சோவியத் கம்யூனிஸ்டு நாட்டு அரசியல், இலக்கியப் புத்தகங்களும் எவ்வளவு மலிவாக நமக்குக் கிடைக்கின்றனவோ அவ்வளவு மலிவாக இதன் விலையும் அமைந்திருந்தால் காந்திஜியின் நூல்களின் மதிப்புக் குறைந்து விடாது; அதற்குப் பதில் அதிகமாகவே உயரும். சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனிக்கவேண்டும். புத்தகம் நல்ல முறையில் அமைந்திருக்கிறது.

## இளைஞர் காங்கிரஸ்

திருவல்லிக்கேணி இளைஞர் காங்கிரஸ் சார்பில் பாலர்பகுதி ஆரம்ப விழா 1-9-57-இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில் ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் முன்பு கொடி வணக்கமும் காரியாலயத்தில் விழாவும் நடைபெற்றன. மாலை, கண்ணன் ஆசிரியர் தலைமையில் திருவல்லிக்கேணி சிறுவர் நாடக மன்றத்தார் நாடகம் ஒன்று நடத்தி, விழாவைச் சிறப்பித்தார்கள்.

## மைசூரில் தசரா கண்காட்சி

மைசூர் தசரா கண்காட்சியை காங்கிரஸ் அக்கிராஸனர் மைசூரில் துவக்கி வைத்தார். இந்தக் கண்காட்சி அக்டோபர் மாதம் 13-ஆம் தேதி வரையில் திறக்கப்பட்டிருக்கும். கலைஞர்கள், நடிகர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையைச் சேர்ந்த புகைப்பட நிபுணர் ஒருவருக்கு ராமன் ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டது.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 19

1 - 10 - '57


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| புகழ் பெற்ற பெயர்கள் | .. | 3 |
| எப்படி இருக்கும்! | ... | 4 |
| படித்தவன் | .. | 9 |
| மகிழம்பூ | .. | 14 |
| மன்னிப்புக் கேள்! | ... | 18 |
| கழுதை கெட்டால் | .. | 22 |
| கடற் புலி | .. | 25 |
| பாசத்தை வென்றவர் | .. | 27 |
| நீங்களும் நானும் | .. | 30 |

அட்டைப் படம்: போட்டோ - ரா. கி. பார்த்தசாரதி

செய்திகள் - 2-ஆம் அட்டை

பேனா நண்பர்கள் - 3-ஆம் அட்டை


வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## கண்ணன்
## சித்திரப் போட்டி முடிவு

பரிசு பெற்றவர்கள்:

(1) உதயசங்கர், (வயது 10) c/o ஸ்ரீ ஏ. கே. ராமசந்திரன், சப் மாஜிஸ்டிரேட், செஞ்சி (தெ. ஆ.)

(2) என். அண்ணாமலை, (வயது 12) மூன்றும் படிவம், ஏ. வி. ஹைஸ்கூல், பள்ளத்தூர் (ராமநாதபுரம் ஜில்லா)

(3) வி. ஏ. பரமேசுவரன், (வயது 13) 118, காகாநகர், புதுடில்லி.

(4) ஏ. அனந்தகிருஷ்ணன், (வயது 14) 15, ராஜவேலு முதலித் தெரு, ராயபுரம், சென்னை 13.

(5) வே. மித்தர், (வயது 15) c/o ஸ்ரீ வேதாசலம், 2, சின்ன சொக்கிகுளம் அக்கிரகாரம், தல்லாகுளம், மதுரை.

(6) எம். கே. தாயுமானவன், (வயது 16) s/o எம். குமாரசாமி செட்டியார், 61, பெருமாள் செட்டி வீதி, திருவள்ளூர் (செங்கல்பட்டு ஜில்லா)

இந்த ஆறு பேர்களுடைய சித்திரங்களும் பரிசுக்குரியவை யெனப் பஞ்சாயத்தார்கள் ஒரு மனதாக முடிவு செய்தார்கள். பரிசு பெற்றவர்களுக்கு நமது வாழ்த்துக்களையும் தேர்வில் கலந்து கொண்டவர்களுக்கு நமது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

இந்த இதழில் கண்ணன் சித்திரப் போட்டியின் முடிவு வெளியாகி யிருக்கிறது. பரிசு பெற்ற குழந்தைகளுக்குக் கண்ணன் சார்பாக வும் உங்கள் சார்பாகவும் என் மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிக்கு 1893 சித்திரங்கள் வந்திருந்தன. கிட்டத் தட்ட 1200 குழந்தைகள்போல இந்தப் போட்டியில் கலந்துகொண் டிருக்கிறார்கள். போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் என் வாழ்த் துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிபதிகளாக இருந்தவர்களுக்கு மூச்சுத் திணறிவிட்டது. பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுப்பது அவர் களுக்குப் பெரும் சோதனையாகிவிட்டது. சித்திரங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் பரிசீலித்துத் தேர்ந்தெடுப்பது எத்தனை கஷ்டமான விஷயம் என்பதை விவரித்துச் சாத்தியமில்லை. அந்தக் கஷ்டமான காரி யத்தை அவர்கள் ஏற்று, கடமையுணர்ச்சியுடனும் பொறுப்புணர்ச்சியுட னும் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதற்கு எத்தனை நன்றி செலுத்தினாலும் அவர்களுக்குத் தகும். கண்ணன் ஆசிரி யர் தவிர நீதிபதிகளாக இருந்தவர்கள் வருமாறு:

ஓவியர் 'ஸாமி', ஓவியர் 'சுசி', ஓவியர் 'மகான்', ஓவியர் 'சுப்பு'.

இவர்களுக்குக் கண்ணன் சார்பாக நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டியில் பரிசு பெற்ற படங்கள் கண்ணன் தீபாவளி மலரில் வழக்கம்போல் வெளியிடப்படும். மற்றவை பரிசு பெறாதபோதிலும் அவையெல்லாம் நல்ல படங்கள் அல்ல என்று தள்ளுபடியாகக் கூற முடியாது. பல படங்கள் மிகவும் சிறப்பாகவே இருந்தன. அவற்றை வரைந்தவர்கள் அடுத்த முறை பரிசு பெறுவார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். எனவே அவர்கள் அதைரியப்படாமல், உற்சாகத்துடன் மேலும் பல சித்திரங்கள் வரைந்து பரிசும் புகழும் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

தீபாவளி மலர் மிகவும் சிறப்பான முறையில் தயாராகி வருகிறது. பேராசிரியர்கள், பெரிய எழுத்தாளர்கள், பரிசு பெற்ற வளரும் எழுத் தாளர்கள், கவிஞர்கள் எல்லாரும் கதைகளும் கவிதைகளும் எழுதி மலரை அலங்கரிக்கிறார்கள். புகைப்பட நிபுணர்கள் தங்களுடைய சிறந்த படங்களை அனுப்பி மலரை அழகுபடுத்துகிறார்கள். பிரபல ஓவியர்களின் சிறந்த சித்திரங்கள், ஹாஸ்யச் சித்திரங்கள், சித்திரக் கதை முதலானவை மலரை மணமுள்ளதாகவே செய்கின்றன. கண்ணன் மலர் மணம் நிரம்பி யிருப்பதோடு இனிப்பாகவும் இருக்கும் என்பது நிச்சயம்.

உங்கள் கண்ணன் மலருக்கு உங்கள் ஊர் விற்பனையாளரிடம் பெயர் கொடுத்துப் பதிவு செய்துகொண் டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதுவரையில் அப்படிச் செய்யாதவர்கள் உடனே பதிவு செய்துகொண்டு விடுமாறு கோருகிறேன். விற்பனையாளரிடம் பதிவு செய்துகொள்ள முடியாதவர்கள் நேரே கண்ணன் காரியாலயத்துக்கு ஒரு ரூபாய் ஆறு நயா பைசா மணியார்டர் செய்துவிடலாம். அல்லது போஸ்டல் ஆர்டர் வாங்கித் தபாலில் அனுப்பலாம். ரிஜிஸ்தர் தபால் மூலம் வேண்டுவோர் ஒரு ரூபாய் அறுபத்திரண்டு நயா பைசா அனுப்ப வேண்டும்.

இவ்வளவு சொன்ன பிறகும் சிலர் சமயத்தை விட்டு விட்டு அப்புறம் மலர் கிடைக்கவில்லையே என்று எழுதத்தான் போகிறார்கள். அதற்கு நான்தான் என்ன செய்ய முடியும்? பந்திக்குப் பிந்தினாலும் மலருக்கு முந்திக்கொள்ளுங்கள்;

—ஆசிரியர்.

# புகழ் பெற்ற பெயர்கள்

'லெமன்'



பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு
பாமா பாடிய தார்என்ருல்,
பாமா விழிப்பாள்; பாபு சிரிப்பான்;
பத்மா சொல்வாள்—பாரதியார்!
ஆசிய ஜோதி, அழகின் உருவம்
அம்பி அதுயார் சொல்லென்ருல்
ஆசிய ஜோதி புத்தரென் பான்இனி
ஆசிய ஜோதிநம் நேருஜி!



ஜய்ஹிந்த் என்றநம் தேசிய வீரர்
ஜகதீஷ் அவர்யார் சொல்லென்ருல்
ஜயா, லக்ஷ்மி, சேகர் எல்லாம்
சேர்ந்தே சொல்வார்—நேதாஜி!
கப்பல் ஓட்டிய தமிழர் அவர்தாம்
கந்தா நீசொல் யாரென்ருல்,
தப்பில் லாமல் சரியாய்ச் சொல்வான்
சபாஷ் கந்தன்—வ. உ. சி.!



பூதானம் செய்திடப் புத்திகள் சொல்லிநம்
பாரத மெங்கும் நடந்தவர்யார்?
நீதான் சொல்லென நீலுவைக் கேட்டால்,
நிரஞ்சன் சொல்வான்—விேனாபாஜி!
ராமர் கிருஷ்ணர் கதைகள் எல்லாம்
நன்ருய்ச் சொல்வார் ஒருதாத்தா
ஹேமா யார்சொல் என்ருல் உடனே
ஹரியும் சொல்வான்—ராஜாஜி!



மாந்தருக் குள்ஒரு தெய்வம் அதுயார்
மஞ்சு நீதான் சொல்லென்ருல்
மண்டுவும் சுண்டுவும் மக்குச் சுப்புவும்
மகிழ்ந்தே சொல்வார்—காந்திஜி!

# எப்படி இருக்கும் எனக்கு?

பி. கே. சாமி

நாம் சில சமயம் ரொம்ப எதிர்பார்க்கும் விஷயங்கள் பெருத்த ஏமாற்றமாக முடிகின்றன. அதிலும் எங்கே நாம் எதிர்பார்த்தபடி கண்டிப்பாய் நடக்குமென்று நினைக்கிறோமோ, அங்கேதான் ஏமாற்றமும் அதிகமாக ஏற்படுகிறது..

'தபால்!' என்று வாசலில் குரல் கேட்கவே, படிக்க ஆரம்பித்த தொடர்கதையை அப்படியே மூடிவிட்டு எழுந்து சென்றேன். அதற்குள் ஒரு கத்தையை வீசிவிட்டுப் போயிருந்தான் தபால்காரன்.

கீழே கிடந்த 'புக் போஸ்ட்' கட்டைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு உள்ளே வந்தேன்.

அடடா!..எந்தக் கதை நிச்சயம் பிரசுரமாகிவிடும் என்று உறுதியாக நம்பியிருந்தேனோ, அந்த 'அற்புதமான கதை' திரும்பி வந்துவிட்டது!

மனம் உடைந்துபோய் மேஜை மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். வாசற் பக்கம் வராந்தாவில் யாரோ வரும் காலடி யோசை கேட்டது. எட்டிப் பார்த்தால், பக்கத்து வீட்டுப் பெரியவர்தான் வந்துகொண் டிருந்தார்.

''என்ன தம்பி, பத்திரிகைக்குக் கதை எல்லாம் எழுதுகிறது உண்டா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் அவர்.

''சரிதான்; நம்முடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வந்துவிட்டார்போ லிருக்கிறது!'' என்று மனத்திற்குள் நினைத்த வண்ணம், ''ஆமாம்!'' என்று மட்டும் சொல்லி வைத்தேன்.

அருகிலிருந்த நாற்காலியில் அவராகவே அமர்ந்தார். ''இதைப் படித்துப் பார்க்கலாமோ?'' என்று கேட்டார், மேஜைமீது கிடந்த கதையைக் கையில் எடுத்துக் கொண்டு.

''படியுங்களேன், அதனால் என்ன!'' என்றேன்.

* * *

பத்து நிமிஷங்கள் அமைதி. நான் தொடர்கதையை விட்ட இடத்திலிருந்து படிக்க, அவரும் என் கதையை ஒரே மூச்சில் வாசித்து முடித்துவிட்டார்.

அதைத் திரும்பவும் மடித்துக் கொண்டே அவர், ''தம்பி! உன்னுடைய தமிழ் நடை நன்றாக இருக்கிறது. வாக்கியங்கள் அற்புதமாக விழுந்திருக்கின்றன. உண்மையாகவே உன்னிடம் திறமை இருக்கிறது. மனம் தளராமல் மேலும் மேலும் எழுத முயற்சிக்க வேண்டும்!'' என்றார்.

''அப்படியே செய்கிறேன்'' என்றேன். வேறு என்னத்தைச் சொல்ல?

''ஆனால் ஒன்று. இந்தக் கதையில் அநுபவத்துக்கு ஒவ்வாத கற்பனை இரண்டொரு இடங்களில் தெரிகிறது. அதனாலேயே ஆசிரியர் இதைத் திருப்பியிருக்கலாம் என நினைக்கிறேன்.''

என்ன விந்தை! சில தினங்களுக்கு முன் ஆசிரியர் எழுதியிருந்த கடிதத்திலும் இதையே தான் குறிப்பிட்டிருந்தார்:

''......தங்கள் தமிழ் நடை அழகாக இருக்கிறது; சரளமாக ஓடுகிறது. உலகாநுபவத்தோடு இயைந்த கற்பனையாகப் புனைந்து எழுதுங்கள்; பிரசுரிக்கிறோம்....''

* * *

''நான் ஒன்று சொல்கிறேன்; கேட்கிறாயா, தம்பி?'' என்றார் பெரியவர்.

''என்ன, சொல்லுங்கள்!'' என்றேன்.

''எனக்குச் சஷ்டியப்த பூர்த்தி முடிந்து ஏழெட்டு ஆண்டுகள் ஓடி

விட்டன. வயது கிட்டத்தட்ட எழுபதை நெருங்கிவிட்டது. என் ஆயுட்காலத்தில் எத்தனையோ ஊர்களில் அலுவல் பார்த்திருக்கிறேன். பலதரப்பட்ட மனிதர்களுடன் பழகியிருக்கிறேன். வாழ்க்கையில் நான் கேள்விப்பட்டதும் அநுபவித்ததுமான சம்பவங்கள் பல பல. அவற்றில் ருசிகரமாக இருக்கும் விஷயங்கள் நிறைய உண்டு. பலவிதமான கதைகள் எழுதப் பொருத்தமாக அவை அமையும் என்று நம்புகிறேன். எனக்கு எழுதும் திறமை கிடையாது. என் அநுபவங்களை நான் சொன்னால் அவற்றிற்குக் கண், மூக்கு வைத்துக் கதைகளாக எழுதி முடிக்க உன்னால் முடியும் அல்லவா? அப்படிச் செய்தால் என்ன?'' என்று கேட்டார்.

''பேஷாகச் செய்யலாம்!'' என்றேன் உற்சாகத்தோடு.

கதையெழுத விஷயம் கிடைக்கிறதென்றால், அதை யார்தான் விடுவார்கள்?

* * *

**அ**தன்படி மறுதினமே அவகாசம்



கிடைத்தபோது ஒரு சம்பவத்தைச் சொன்னார் அவர். கேட்க மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. புதுமையான கற்பனைக்கும் துணை புரிந்தது. கதையாக அமைத்து எழுதி அவரிடம் காட்டினேன்.

"இதைப் பத்திரிகையில் வெளியிடாவிட்டால் நான் இந்த ஊரை விட்டே ஓடிவிடுகிறேன்!" என்றார் பெரியவர்.

பிறகு, "எந்தப் பத்திரிகைக்கு அனுப்புகிறாய்?" என்று கேட்டார்.

"அதிரசம் - வாரமலருக்குத் தான்!" என்றேன்.

"அது மட்டும் என்ன விசேஷம்?"

"புதுசாக வருகிறவர்களுக்கு அங்கேதான் கொஞ்சம் இடம் கொடுக்கிறார்கள் போல் தெரிகிறது; அதனால்தான்!"

"சரி, இருக்கட்டுமே. அனுப்பிப் பாரேன்!" என்று எழுந்து போனார். வாசல் வரைக்கும் போய் விட்டுத் திரும்பி வந்தார்.

"சம்மானம் வந்ததும் ஆளுக்குப் பாதியாக எடுத்துக் கொள்வோம். இது பிரசுரம் ஆனதுமே அடுத்த கதைக்கு ஒரு விஷயத்தைச் சொல்கிறேன்" என்றார்.

"ரொம்ப சரி!" என்றேன்.

'சரியான காரியவாதிதான்!' என்று எண்ணிக்கொண்டேன்.

* * *

நாங்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. முதல் கதை எழுதியனுப்பிய மூன்றே வாரங்களில் அதிரசம்-வாரமலரில் பிரசுரமாகி விட்டது. எனக்கு உற்சாகம் பிடிபடவில்லை!

பெரியவர் வாயெல்லாம் பல்லாக ஓடி வந்தார். தட்டிக் கொடுத்தார். அடுத்தாற்போல் கதை எழுத மற்றொரு சம்பவத்தைச் சொன்னார். முந்தினதை இது தூக்கியடிக்கும் என்று பட்டது எனக்கு.

என்னுடைய உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் அப்போதே மெல்ல மெல்லச் சபலம் தலை நீட்ட ஆரம்பித்தது... என்னைப் பேராசை பற்றிக் கொண்டது!

'சம்மானம் கணிசமாக வருமே! இவருக்குப் போய் அரைப் பங்கு கொடுப்பானேன்? சும்மா வாயால் சொல்லிவிட்டுப் போகிறவர் இவர்; உழைப்பதெல்லாம் நாம் அல்லவா?' என்கிற ரீதியில் எண்ணம் ஓடியது.

எனவே அவரை நோக்கி, "பிரசுரமாகும் ஒவ்வொரு கதைக்கும் ஐந்து ரூபாய் வீதம் தந்துவிடுகிறேன். சம்மானம் வருகிறதை நான் எடுத்துக் கொள்கிறேன். செலவு என் பொறுப்பு. பணமே வராவிட்டாலும் உங்களுக்குக் கதை ஒன்றுக்கு ஐந்து ரூபாய் நிச்சயம்! என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

ஆனால் இதற்கெல்லாம் அவரா மசிகிறவர்?

"அது என்ன கணக்கு ஐந்து ரூபாய்? கதைக்கு இருபத்தைந்து ரூபாய் சாதாரணமாகக் கிடைக்குமே!....எப்படிப் போனாலும் இருபதுக்குக் குறையாது. அதன்படி பார்த்தால், ஒரு கதைக்குப் பத்து ரூபாய் வீதமாவது எனக்குக் கொடுக்க வேண்டும். அப்படியானால் சம்மதிக்கிறேன்" என்றார்.

மேற்கொண்டு பேரத்திற்கு அவர் இடம் கொடுக்காமல் பேசவே, அதன்படியே ஒப்பந்தம் செய்து கொண்டோம். அவர் கூறும் ரசமான அநுபவங்களை வைத்துக் கதை எழுதி, போட்டி எதிலாவது கலந்துகொண்டு வெற்றி பெற்றால் நூற்றுக் கணக்கில் பரிசு வரக்கூடும் அல்லவா? அப்படிப் பெரிய தொகை கிடைத்தாலும் முழுவதும் எனக்கேதான் என்று முடிவு செய்து கொண்டோம்.

அந்த நேரத்திலேயே முதல் கதைக்குப் பத்து ரூபாய் பெற்றுக் கொண்டு போனார் பெரியவர்.

* * *

இரண்டாம் கதையும் திரும்பவில்லை. ஒரு மாதத்திற்குள் பிரசுரம் ஆகிவிட்டது. இரண்டிற்குமே சம்மானம் வரவில்லை. சாவகாசமாக அனுப்புவார்கள் என்று எண்ணிக்கொண்டேன்.

அதன்பிறகு மளமளவென்று ஒன்றன்பின் ஒன்ருக இரண்டு கதைகள் பிரசுரமாயின. பெரிய வருக்கும் உடனுக்குடன் பணம் கொடுத்து விட்டேன்.

ஆனுல் பத்திராதிபரிடமிருந்து ஏனே சம்மானம் எதுவும் வந்த பாடில்லை எனக்கு. 'இன்று வரும், நாளை வரும்' என்பது போய், 'இந்த வாரம் அல்லது அடுத்த வாரம்' என்று எதி ார்க்க ஆரம்பித்தேன். பிறகு' ாதக்கணக்கில் ஒத்திப் போட் டேன். எதிர்பார்த்து எதிர் பார்த்து அலுத்துவிட்டது. ஆசிரிய ருக்குக் கடிதம் எழுதி எழுதி அயர்ந்துபோய்விட்டது. கிணற்றில் கல்லைப் போட்டதுபோல் கம் மென்று இருந்தார் ஆசிரியர். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

இத்தனைக்கும் பெரியவர் தம் அநுபவங்களைச் சொல்வதை நிறுத்தவில்லை. நான் கதைகள் எழுதுவதையும் விட்டுவிடவில்லை. அவை பத்திரிகையில் பிரசுரமா வதும் தடைப்படவில்லை.

* * *

இப்படியாக மொத்தம் ஆறு கதைகள் வெளிவந்து விட்டன. எழுத ஆரம்பித்து முழுசாக அரை வருஷம் ஓடிவிட்டது! பெரியவருக் கும் அதுவரை அறுபது ரூபாய் கொடுத்துவிட்டேன். எனக்கோ கதைகள் பிரசுரமான பிரதிகள் மட்டுமே மிச்சம்; வரும்படி பூஜ்யம்.

எழுதவேண்டும் என்கிற உற்சாக மெல்லாம் போன இடம் தெரியா மல் பறந்தோடி விட்டது! நான் நம்பிக்கை இழந்துவிட்டேன்!

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில்தான், தென்காசியிலிருந்து என் அருமை நண்பர் அமிர்தகணேசன் எனக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதில், தாம் இருபது நாட்கள் மலையாள ராஜ்யம் முழுவதும் சுற்றுப்பிர யாணம் செய்யப் போவதாகவும், கூடவே நான் அவசியம் வர வேண்டுமென்றும் உரிமையுடன் கண்டிப்பாக எழுதியிருந்தார்.



தந்தை: எதுக்குடா அழுவுறே, உதை கிதை கேக்குதா?

பையன்: நான் உதையா கேட்டேன்? பந்துதானே கேட் டேன்!

---

வெகு நாளாகவே அந்த அழகிய பிரதேசங்களையெல்லாம் நேரில் கண்டு களிக்கவேண்டும் என்ற ஆசை உள்ளூற இருந்தபடியால், கிடைத்த வாய்ப்பை நழுவவிட மனமில்லை எனக்கு. உடனே என் சம்மதத்தைத் தெரிவித்து நண் பருக்குப் பதில் எழுதிவிட்டேன்.

* * *

நான் புறப்படுவதற்கு நான்கு தினங்களுக்கு முன் பெரியவர் என் வீட்டிற்கு வந்தார்.

அவரிடம் என் பிரயாணத் திட் டத்தைப் பற்றிச் சொன்னபோது அவர், ''அதற்கென்ன பேஷாகப் போய் வா, தம்பி! எதுவும் வந்தால் தபாற்காரனிடம் விவரம் சொல்லி வைக்கிறேன்'' என்ருர்.

* * *

இதைப் பற்றிய சிந்தனையெல் லாம் தூரக் கட்டி வைத்துவிட்டு, குறிப்பிட்ட தேதியில் ஊர் சுற்றப் புறப்பட்டு விட்டேன்!

நண்பர் அமிர்த கணேசனுக்கு ஒரே குஷி! தம்முடைய செல்

வாக்கை யெல்லாம் உபயோகித்துப் பல இடங்களுக்கும் என்னை அழைத்துச் சென்று காண்பித்தார். நாட்கள் போவது தெரியாமல் பொழுதைப் போக்கினோம்.

திருவனந்தபுரத்தில் இரண்டு நாட்கள் தங்குவதாக முதலில் தீர்மானித்திருந்தோம். ஆனால் நான்கு தினங்கள் இருக்கும்படி நேர்ந்து விட்டது. இவ்வாறே பலவிடங்களிலும் தாமதம் ஏற்பட்டபடியால் எதிர்பார்த்தபடி மூன்று வார காலத்தில் எங்கள் பிரயாணம் முடியவில்லை; ஒரு மாதம் ஆகி விட்டது.

ஒருவாறாக நண்பர் அமிர்த கணேசனிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பினேன்.

* * *

வந்தவுடன் முதல் காரியமாகப் பக்கத்து வீட்டில் பெரியவரைப் பற்றி விசாரித்தபோது, முந்தின நாள்தான் 'வட இந்திய யாத்திரா ஸ்பெஷ'லில் அவர் காசி யாத்திரை புறப்பட்டுப் போனதாகத் தகவல் தெரிந்தது.

என் வீட்டுக்கு வந்தேன்.

பூட்டிக் கிடந்த வீட்டைத் திறந்து, தூசி, குப்பைகளை அகற்றித் துப்புரவு செய்யவே வெகு நேரம் பிடித்தது.

* * *

வாசல் 'கேட்' அருகில் நின்ற என்னை நோக்கி, "ஸார், வந்துவிட்டீர்களா? இந்தாருங்கள் உங்களுக்கு ஒரு தபால்!" என்று ஒரு கவரைக் கொடுத்துவிட்டுப் போனான் தபால்காரன். நான் ஆவலுடன் வாங்கிப் பார்த்தேன்!

'அதிரசம்' காரியாலயத்திலிருந்துதான் வந்திருந்தது அது!

உறையைப் பிரித்தவுடன் உள்ளிருந்த கடிதம் பேசுகிறது:

"சென்னை, 20-9-1957.

அன்புடையீர்,

தாங்கள் சம்மானம் விஷயமாக எழுதிய கடிதங்கள் கிடைத்தன.

தங்கள் கதைகள் ஒவ்வொன்றும் பிரசுரமானபோது, ஆரம்பத்தில் நேயர்கள் சிலரிடமிருந்து பரவலாகப் புகார்கள் வந்தன. அதாவது மேற்படி கதைகளைப் போல் வேறெங்கோ படித்திருப்பதாக அவர்கள் எழுதிவந்தார்கள்.

இத்தகைய புகார்கள் வருவது சகஜம் ஆனபடியாலும், புகார் கூறிய எவரும் ஆதாரத்துடன் அவ்விதம் செய்ய முன்வரவில்லையாதலாலும் நாம் அவற்றை அவ்வளவாக லட்சியம் பண்ணவில்லை; பொறுத்திருந்தோம்.

ஆனால் சென்ற வாரம் கடிதம் எழுதியுள்ள ஒரு நேயர், தாங்கள் எழுதியுள்ள ஆறு கதைகளும் இருபது வருடங்களுக்கு முந்திய 'பஞ்சாமிர்தம் தீபாவளி மலர்' ஒன்றில் வெளியான கதைகளை ஒத்திருக்கின்றன என்று எழுதி அந்த மலரையும் எங்கள் பார்வைக்காக அனுப்பியிருந்தார். என்ன விந்தை! தங்கள் கதைகள் யாவும் அந்த மலரிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தது நமக்கு.

எங்கள் பத்திரிகைக்கு உள்ள நற்பெயரைக் கெடுக்கும் இத்தகைய இழிவான செயலில் இறங்கிவிட்ட தங்களுக்கு, பதிலுக்குப் பதில் இழிவு தேடித்தர எம்மால் இயலும் என்றாலும் அவ்விதம் செய்ய நாம் விரும்பவில்லை.

இந்த விஷயத்தை இத்துடன் விடுகிறோம். இது சம்பந்தமாக மேற்கொண்டு எதுவும் எமக்கு எழுத முயற்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

ஆசிரியர்,

அதிரசம்-வாரமலர், சென்னை."

* * *

மலையுச்சியில் நின்றுகொண்டு பெருமைப்படும் ஒருவனைத் தலைகுப்புறப் பிடித்துத் தள்ளினால் எப்படி இருக்கும்?

அப்படித்தான் இருந்தது எனக்கு!

# படித்தவன்

தங்கமணி

பள்ளிப் பாடத்தில் வரும் ஏதோ ஓர் ஆங்கிலக் கவிதையை உருப்போட்டுக்கொண்டே நடைபாதையோரமாக மெல்ல நடந்து கொண்டிருந்தான் அல்லிமுத்து.

திடீரென்று, ஒரு கர்ஜனை:

''..பொழுது போக்குக்காகப் புத்தகம் படிக்கின்ற முட்டாள் தடியன்களைக் குழி வெட்டிப் புதைக்க வேண்டும்! அப்போது தான் உலகத்தின் இலக்கியமும் உருப்படும்; அந்த உருப்பட்ட இலக்கியத்தைப் படிக்கின்ற உலக மக்களும் உருப்படுவார்கள்! விடியாமூஞ்சி ஆசிரியர்களும், தூங்குமூஞ்சி வாசகர்களும்..'' உணர்ச்சி மயமான இந்த உறுமல் கேட்டது.

அல்லிமுத்து சட்டென்று நின்ருன்; பரபரப்புடன் திரும்பிப் பார்த்தான். அருகிலிருந்த அறிவு வளர்ச்சிப் படிப்பக வாசலில் நின்று, சூடாமணியிடம் என்னவோ காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தான் தங்கவேலு.

அல்லிமுத்து அவர்களை அணுகினன்; ''என்னடா தங்கவேலு, சூடாமணியிடம் ஏதோ சண்டமாருதமாக முழங்குகிருயே: என்னடா சங்கதி?'' என்று தங்கவேலுவைப் பார்த்துப் புன்னகையுடன் கேட்டான்.

''..இல்லே..வந்து..'விடியாமூஞ்சி எழுத்தாளன்' என்னும் திரைப்பட வசனத்தைச் சூடாமணிக்குத் தமாஷாகப் படித்துக் காட்டினேன்..''கையிலிருந்த திரைப்பட வசனப் புத்தகத்தைச் சுருட்டிக் காற்சட்டைப் பையில் திணித்துக்கொண்டே அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் தங்கவேலு.

''உன்னுடைய 'டும், டுமீல்' பேச்சைக் கேட்டதும் ஏதோ இலக்கியச் சண்டை நடக்கிறதோ, என்னவோ என்று நினைத்து விட்டேன்..!'' என்று குறும்பாகச் சிரித்தான் அல்லிமுத்து.

''இன்றைச் சிறுவர் இலக்கியமே வெறும் வெத்துவேட்டு 'டும் டுமீல்' ஆகத்தானே போயிற்று!'' என்று குத்தலாகச் சிரித்தாள் சூடாமணி; அவளுக்குத் துப்பாக்கிக் கதைகள் என்ருலே துளிக்கூடப் பிடிக்காது; ஆமாம், பிடிக்கவே பிடிக்காது!

''அதெல்லாம் கிடக்கட்டும்.. ஏண்டா அல்லிமுத்து, பரீட்சையிலே எப்படி எழுதியிருக்கிருய்?'' என்று கேட்டான் தங்கவேலு.

''நன்ருகத்தான் எழுதியிருக்கிறேன்.''

''எஸ். எஸ். எல். சி. வரைக்கும் படிக்க வைப்பதற்கே என் அம்மா எவ்வளவோ கஷ்டப்பட்டாள்! இனிமேலும், அவளை வாட்டி வதைக்க நான் விரும்பவில்லை. ஏதாவது வேலை செய்து, சம்பாதித்து, என் அம்மாவை நிம்மதியாக இருக்க செய்யப்போகிறேன்'' அன்பும் ஆசையும் அல்லிமுத்துவின் குரலை அதிர வைத்தன.

''ஓர் ஹரிஜனச் சிறுவன் எஸ். எஸ். எல். சி. வரை படித்ததே எம். ஏ. படித்தது போல ஆயிற்றே!..ஹரிஜனம் என்ருலே, நம் அரசாங்கத்தில் அக்கறையோடு உதவி செய்கிருர்களாமே!'' சூடாமணி பரிவோடு பேசினுள்.

''அரசாங்கமும் அவரைக் காயும்! அல்லிமுத்து..நீ எதற்கும் கவலைப்படாதே! லஞ்சப் பேய் கொஞ்சி விளையாடும் இந்தப் பஞ்ச காலத்திலே நீ வேலை தேடி வீணுக அலையாதே! பரீட்சையிலே வெற்றியோ, தோல்வியோ-என்னேடு வா. துறைமுகத்தில் நான் வேலை செய்யும் மேஸ்திரியிடம் சொல்லி, உனக்குக் கட்டாயம் வேலை வாங்கித் தருகிறேன்'' என்று உறுதியாகச் சொன்னுன் தங்கவேலு.



பையன்: நூறு தடவை இம் போஸிஷன் எழுதச் சொன்னீங் களே, எங்க அப்பாருகிட்டே சொல்லி, எங்க அச்சாபீஸிலே அச்சடிச்சுக்கிட்டு வந்திட் டேன், பாருங்க!

வாத்தியார்:........?

---

"மூட்டை சுமக்கும் கூலி வேலையா?" என்று வெடுக் கென்று கேட்டாள் சூடாமணி.

"ஆமாம்."

"நீதான் எட்டாம் வகுப்புப் படித்துவிட்டு முட்டாளைப்போல மூட்டை சுமக்கிருய்! எஸ். எஸ். எல். சி படித்த மாணவனைப் போய்.." என்று சீறினாள் சூடா மணி.

தங்கவேலுக்கு ஆத்திரம் பொத் துக்கொண்டு வந்துவிட்டது! "அட சீ, சும்மாக் கிட நீ, கத்தி ரிக்காய் என்றும் அறியாமல், கொத்தவரங்காய் என்றும் புரி யாமல் சும்மாவாவது கத்து கிருயே! மூட்டையைச் சுமந்தால் என்ன, கோட்டையைச் சுமந்தால் என்னவாம்..? எட்டு மணி நேரம் பாடுபட்ட பிறகு, கொட்டை கொட்டையாக ரூபாய் கிடைக் கிறதே, அது போதாதா?" என்று குமுறினான்.

"அடடே!..எனக்காக நீங்கள் ஏன் சண்டை பிடித்துக் கொள் கிறீர்கள்!...பரீட்சை முடிவு தெரி யட்டும். அப்புறம் என் வேலை யைப்பற்றிப் பேசிக் கொள்ள லாம்." இன்னும் ஏதேதோ பேசி அவர்களைச் சமாதானப்படுத்தி விட்டு, அங்கிருந்து புறப்பட்டான் அல்லிமுத்து.

* * *

**நா**லைந்து மாதங்களுக்குப் பின்...

"..அன்பையும், பண்பையும் வளர்க்காத கதை-உண்மையையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டாத கதை—அறிவையும், அறத்தையும் செழிக்கச் செய்யாத கதை, கதையே அல்ல; அது மனிதனைச் சூசகமாய் மயக்கிச் சுட்டெரிக்கும் நச்சுத் தீ!..." சிந்தாமணி சிற் றுண்டிச் சாலையின் வானொலியில் யாரோ ஒரு நாவலாசிரியர் சொற் பொழிவாற்றிக்கொண் டிருந்தார்; சிற்றுண்டிச் சாலையின் வாசலில் நின்று, நாவலாசிரியரின் நாத்திறம் வாய்ந்த சொற்பொழிவைக் கருத் துடன் ரசித்துக் கேட்டுக்கொண் டிருந்தான் தங்கவேலு. அப் போது-

திடீரென்று, ஏதோ..கூச்சல்!

நாகரிகமான ஒரு வாலிபனை இரண்டு போலீஸ்காரர்கள், காட்டு மிராண்டித்தனமாக அடித்து உதைத்து இழுத்துச் சென்றார் கள்; அவர்களைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, ஏதேதோ பேசியவாறு தொடர்ந்து சென்றது சிறு கும்பல்.

தங்கவேலு திகைத்தான்; பதைத்தான்; கும்பலை நோக்கித் தாவினான்; ஓடினான்; பார்த் தான்; விசாரித்தான்.

எவனோ தெரியவில்லையாம்: பி. ஏ. படித்தவனும்; வேலை கிடைக்கவில்லையாம்: வறுமையாம்; துன்பமாம்; சகிக்க முடியவில்லை யாம்; ஆகவே, வட்டிக் கடையில் புகுந்து, எவனிடமோ ஜேப்படி செய்துவிட்டானும்!

தங்கவேலு சிரித்தான்: என் னவோ மாதிரியாகச் சிரித்தான்; சிந்தித்துக்கொண்டே சிரித்தான்!

கொஞ்ச தூரம் சென்றதும்—

எதிர்ப்புறத்திலிருந்து கவலையும் களைப்புமாகத் தள்ளாடித் தள்ளாடி

நடந்து வந்துகொண் டிருந்தான்; ஆமாம், அல்லிமுத்துதான்!...

அவனைக் கண்டதும்—

தங்கவேலு விரைந்து சென்ருன். அல்லிமுத்துவின் கையைப் பிடித்து அன்புடன் குலுக்கிக் கொண்டே கேட்டான்: ''அல்லிமுத்து, சௌக்கியமா..?''

'சௌக்கியமே' என்று கௌரவத்திற்காகப் புளுகவும் இல்லை: 'மிகவும் கஷ்ட நிலையிலிருக்கிறேன்' என்று உள்ளதையும் சொல்லவில்லை; அல்லிமுத்து சிரித்தான்: அசட்டுத்தனமாக, 'ஹி..ஹி..ஹி..' என்று சிரித்து மழுப்பினுன்.

''ஏண்டா..நாலைந்து மாதங்களாக எங்கேயடா போயிருந்தாய்? ஆளைக் காண்பதே அரிதாகிவிட்டதே! இரண்டு மூன்று தடவை உன்னைச் சந்திப்பதற்காக உங்கள் குடிசைக்கு வந்தேன். அந்தச் சமயத்தில் நீ எங்கேயோ வெளியே போயிருப்பதாக உன் அம்மா சொன்னுள். ஆமாண்டா அல்லிமுத்து, நீ எஸ். எஸ். எல். சி, யில் வெற்றியா, தோல்வியா?''

''வெற்றிதான்'' என்று அசுவாரசியமாகச் சொன்னுன் அல்லிமுத்து.

''ஏதேனும் வேலை?''

''இல்லை.''

''என்ன?''

''கிடைக்கவில்லை!'' வெடுக்கென்று சொன்னுன் அல்லிமுத்து.

''ஹரிஜனம் என்ருல், அரசாங்கம் தனி அக்கறையோடு உதவி செய்கிறது என்று அன்று சூடாமணி சொன்னுளே!''

''ஆமாம், அவள் சொன்னுள். ஆனல், நடைமுறையில்...'' அல்லிமுத்துவுக்கு மேலே பேச முடியவில்லை; கடந்த நாலைந்து மாதங்களாக அவன் வேலை தேடி, பட்ட துன்பங்கள் அவமானகரமான சம்பவங்கள், நல்லவர்களின் உள்ளங்களைச் சுட்டெரிக்கும் கொடுமையான ஊழல்கள், ஊதாரித்தனங்கள் யாவும் அவனுடைய நினைவில் நச்சுப் பாம்புகளாய்ச்





ஜிப்பாக்காரன்: நீங்கதானே குஸ்திபோடுவது எப்படின்னு கட்டுரை எழுதினவரு?

சட்டை: ஆமாம்.

ஜிப்பா: அதுலே மூக்கை உடைக்கிற பகுதியிலே ஒரு சந்தேகம். அதை நேரிலேயே செய்து தெரிஞ்சிக்கிட்டுப் போக வந்தேன்!

---

சீறின; அவனது உயிரையும் உடலையும் சுருட்டி முறுக்கிப் பிழிந்தன.

ஒன்றிரண்டு விநாடிகள் வரை அல்லிமுத்து ஆடாமல், அசையாமல், மௌனமாய் நின்றான். அவனுடைய வறண்ட நெஞ்சில் திரண்ட துன்பம் புரண்டோடியது. தன்மானமுள்ள இதயத்தின் பிடிப்புக்குக் கட்டுப்படாமல் பொங்கிக் குபு குபுத்த அழுகை, சந்தடி எதுவுமின்றிக் குழிவிலிருந்த விழிகளின் வழியாய்க் கண்ணீராய் வடிந்தது.

அல்லிமுத்துவின் மௌனக் கண்ணீரைக் கண்டதும், தங்கவேலு திடுக்கிட்டுத் துடித்துப் பதைத்தான். "அல்லிமுத்து! ஏண்டா அழுகிறாய்?" என்று அன்பு உணர்ச்சி கொந்தளிக்கக் கூவினான். அவன் உடல் லேசாக நடுங்கியது!

அல்லிமுத்து பதிலுக்கு ஒரு வார்த்தையும் பேசவில்லை; அழுதான்; அழுக்குப் பிடித்த சட்டைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக்கொண்டே தேம்பித் தேம்பி அழுதான்.

தங்கவேலு ஸ்தம்பித்து நின்றான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை; ஆமாம், என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை. அவன் விழித்துக்கொண்டு நின்றான். சில நிமிஷங்களுக்குப் பின், சட்டென்று அல்லிமுத்துவின் அழுகையை நிறுத்த நல்ல யோசனை மின்னல்போல் தோன்றியது.

"அல்லிமுத்து, அழாதேடா, வா, காபி சாப்பிட்டுவிட்டு வருவோம்."

"இல்லை; வேண்டாம்."

"அல்லிமுத்து, தயவுசெய்து மறுக்க வேண்டாம்; சும்மா, வா"

தங்கவேலு கால்சட்டைப் பையில் கையைத் திணித்தான்; பையில் அன்று துறைமுகத்தில் பெட்டி சுமந்து சம்பாதித்த கூலிப் பணம் கலகலத்தது; அதைத் துழாவிக் கொண்டே, அருகிலிருந்த சிந்தாமணி சிற்றுண்டிச் சாலைக்கு அல்லிமுத்துவை அழைத்துச் சென்றான்.

சிற்றுண்டிச் சாலையில் சாப்பிட்டபின், தங்கவேலுவும் அல்லிமுத்துவும் நடைபாதையோரமாகப் பேசிக்கொண்டே சென்றார்கள். பேச்சுப் போக்கில் அல்லிமுத்து கூறினான்: "எஸ். எஸ். எல். சி. யில் வெற்றி பெற்றதும் வேலை தேடக் கிளம்பினேன். எங்கெங்கோ அலைந்தேன். யார் யாரையோ கெஞ்சினேன். எவ்வளவோ முயன்றேன். எவ்வளவோ கஷ்டப்பட்டேன். வேலை கிடைக்கவில்லை. எங்கே பார்த்தாலும் ஊழல் பூச்சி அரித்துக் கொண்டிருக்கிறது! எவனை அணுகினாலும் மண்டை காய்ந்த நாய் மாதிரி 'லஞ்சம்! லஞ்சம்!' என்று குரைக்கிறான்! ஏதேதோ எண்ணி நம்பியிருந்த என் நெஞ்சம் நெக்குவிட்டு உருகியது! இந்த அவல கதியில் எவனோ ஒரு நய வஞ்சகன் எனக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, என் அம்மாவிட




மிருந்து பதினைந்து ரூபாயை அமுக்கிக் கொண்டு போய் விட்டான். என் அம்மா மனமுடைந்து போனாள். என்னிடம் பேசுவதே கிடையாது. எனக்கும் ஊர் சுற்றும் தடியனுக வீட்டுப் பக்கம் தலை காட்டவே வெட்கமாயிருக்கிறது; வீட்டுக்குப் போய் என் அம்மாவின் முகத்தைப் பார்த்து இரண்டு மூன்று வாரங்களாகின்றன. ஹூம்!''

இதைக் கேட்டு தங்கவேலு சிரித்தான்!

அதைக் கண்டு அல்லிமுத்து விழித்தான்!

''ஏண்டா சிரிக்கிருய்?''

''ஹூம், இந்தக் காலத்துப் படிப்பையும், அதற்கு இந்த நாட்டிலிருக்கிற மதிப்பையும் நினைத்துப் பார்த்தால், சிரிப்புத்தான் வருகிறது. அது சரி, அல்லிமுத்து, நான் ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லுகிருயா?''

''உம்'' அல்லிமுத்து, தங்கவேலுவை உறுத்துப் பார்த்தான்.

''படிப்பது எதற்கு?''

''பிழைப்பதற்கு.''

''படித்துப் பிழைக்க முடிகிறதா? நம்மைப் போன்ற ஏழைகளால், படித்துப் படித்ததற்குரிய மதிப்போடு பிழைக்க முடியுமா?''

''......''

''அல்லிமுத்து, பாடுபட்டு உழைத்துப் பிழைக்கும் நம் பரம்பரைக்குப் படிப்பு எதற்கடா? படிப்பு, மதிப்பு என்றெல்லாம் எண்ணிக்கொண்டு, வீணுகக் கெட்டுக் குட்டிச் சுவராகாதே! பேசாமல், நாளையிலிருந்து என்னேடு வேலைக்கு வா.''

''எஸ். எஸ். எல். சி. படித்துவிட்டு மூட்டை சுமக்க நான் ஒரு காலும் ஒப்பமாட்டேன்! என்னதான் வறுமை வந்தாலும் நான் படித்தவன்! படித்தவனுக்குரிய மதிப்போடு, படித்ததற்குரிய தகுதியோடு வேலை செய்து சம்பாதித்துத் தரத்தோடு வாழ்வேன்! இப்போதே நான் மந்திரியைப் போய்ச் சந்திக்கிறேன்! சந்திக்க முடியவில்லையென்றுல் சந்திப்புப் பயன்படவில்லை என்றுல் அவர் பங்களா வாசலிலேயே உண்ணுவிரதமிருந்து உருக்குலைந்து மடிவேன்!'' உணர்ச்சி மல்க ஓங்கி முழங்கிவிட்டு, பைத்தியக்காரன் போல, தலை தெறிக்கப் பாய்ந்தோடினுன் அல்லிமுத்து.

''படித்தவனும்! மந்திரி பைக்குள்ளேயா வேலை வைத்துக் கொண்டிருக்கிருர்? படித்தவன் கெட்டுப் போவது இப்படித்தான்! படித்தவன் உடல் வருந்தப் பாடுபடுவது மதிப்பல்லவாம்! முட்டாள்! ஹூம்; இவனைச் சொல்லி என்ன பயன்? இந்தக் காலத்துப் படிப்பு இப்படிப்பட்ட 'படித்தவர்'களைத்தான் உற்பத்தி செய்கிறது! படித்தவனும், படித்தவன்! பைத்தியக்காரன்!'' என்று தங்கவேலு தன் வழியே சென்றுன்.



ஜே. எம். சாலி

# மகிழம்பூ

மரியத்தின் உடல் அனலாகக் கொதித்தது. விண் விண் என்று காலிலே வலி தெறித்தது. ''அம்மா..அம்மா'' என்று அவள் வாய் முணுமுணுத்தது. குழி விழுந்த கண்களில் ஒளியேயில்லை. நினைவு இற்றுவிட்டதுபோன்ற பிரமை; சுற்றுமுற்றும் பார்த்தாள். பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. அம்மா எங்கேயோ வெளியே போயிருந்தாள்.

மரியத்தின் நினைவெல்லாம் மகிழம்பூ மரத்தில்தான் ஒட்டிக் கிடந்தது. மகிழ மரத்தை நாடி ஓட வேண்டுமென அவள் உள்ளம் துடித்தது. ஆனால்..ஆனால்..!

அவளால் எப்படிப் போக முடியும்? மரத்தடிக்குப் போக முடியாமலல்லவா அவளது கால்கள் இருக்கின்றன!

மரியம் விம்மினாள்!

மகிழ மரத்தடி வெறிச்சோடிக் கிடந்தது. ஊரின் மேற்குக் கோடியிலே பள்ளி வாசல். அதனையடுத்து அந்த மகிழ மரம் இருந்தது. நெஞ்சையள்ளும் பசுமைக் கோலத்தோடு பரந்து, வளர்ந்து, செழித்து நின்ற அந்த மரத்தை, மரியம் நாள் முழுதும் சுற்றிய வண்ணம் இருப்பாள்.

மகிழம்பூ பூத்துக் குலுங்கியிருந்தது. இளங்காற்றிலே இணைந்து வரும் மலரின் மணத்தை நுகர்ந்த வண்ணம், மரியம் மரத்தின் புறத்தே நின்றிருப்பாள். உதிரும் பூக்களை ஒன்று சேர்ப்பது அவள் வேலை! தினந்தோறும் இரண்டு படி பூக்களாவது சேர்த்துவிடுவாள். பிஞ்சுக் கரங்கள் அவற்றை மாலையாகத் தொடுக்கும். மாலையில் நாலைந்து வீடுகளுக்குப் பூ கொடுத்துவிட்டு, பதிலாக அரிசியோ அன்றி காசோ வாங்கிக் கொண்டு, களிப்போடு அந்தச் சிறுமி மீளுவாள்.

மரியம் சின்னஞ்சிறு ஏழைப் பெண். எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். பிஞ்சு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டாள். அன்னைதான் அனைத்துமாக இருந்து பேணினாள். ஓரிரண்டு வீடுகளில் வேலை பார்த்து மகளைக் கவலையில்லாமல் வளர்த்து வந்தாள். மரியம் தன்னால் ஆன மட்டும் 'சிறுவாடு' சேர்ப்பதில் தவறவில்லை.

குறுகுறுப்பான பார்வையாலும், குறும்புப் பேச்சாலும், ஊர்ப் பெண்களின் அன்பை எளிதில் பெற்றாள் மரியம். கள்ளம் கபடு எதுவும் இல்லாத அந்தச் சிறுமியிடம் அன்பு காட்டப் பெண்களும் தவறவில்லை. பிரியமாகத் திண்பண்டங்களெல்லாம் கொடுப்பார்கள்.

மரியம் மெல்லப் புரண்டு படுத்தாள். அசையக்கூட உடலில் பலமில்லை. இரண்டு மூன்று நாட்களாக ஆறாத வேதனையால் அவள் அவதிப்படுவதை அவளேயன்றி வேறு யார் அறிவார்கள்? மரியத்தின் நினைவு நீராகப் பெருகியது. நெஞ்சை அது நெருக்கியது. விழி

களிலே கண்ணீர் திரண்டது. முகத்தில் உருண்டது.

மஸஹர்! அவள் உள்ளத்தே அவன் உதித்தான்! ஆம்; அவனல் வந்த வினைதானே எல்லாம்?

மூன்று நாட்களுக்குமுன்..

மாலை நேரம். மகிழ்ச்சி பொங்க மகிழ மரத்தடியில் மரியம் நின்றிருந்தாள். அசைந்தாடும் மரக்கிளைகளிலிருந்து பூக்கள் உதிர்ந்த வண்ணமிருந்தன. ஓய்ச்சல் ஒழிவின்றி ஒவ்வொரு பூவையும் எடுத்துக்கொண்டேயிருந்தாள். பள்ளிவாசல் 'மனோரா'க்களில் கொஞ்சி விளையாடும் புருக்களின் குரலைத் தவிர வேறு எந்தச் சத்தமும் இல்லை.

அந்த அமைதி மறு நிமிஷம் மறைந்தது. இரண்டு மூன்று சிறுவர்களின் கிச்சு மூச்சுக் குரல்தான் எழுந்து வந்தது.

''டேய், மஸஹர்! அந்த மகிழ மரத்தைப் பார்த்தாயா? எத்தனை ஆயிரம் பூக்கள்! மலரின் மணம் எவ்வளவு மகிழ்ச்சியூட்டுகிறது!'' அஜீஸ் ஆனந்தமாகக் கூவினன்.

''மரியத்தைப் பார்த்தாயா மஸஹர்? பெட்டி நிறையப் பூ சேர்த்து வைத்திருக்கிருளே! அத்தனை பூவையும் எப்படியாவது பிடுங்கிடணும்..'' மற்ருெரு குரல் கெட்ட செய்கையைச் செய்யக் கூவியது.

கருத்துத் தெரியாத சிறுவர்கள். நல்லது கெட்டது இன்னதென்று அறிய இயலாத வயசு. மஸஹருத்



தின் வசதியான இடத்துப் பையன். செல்லப் பிள்ளை! விருப்பப்படி எதையும் செய்வான். நண்பர்கள் அவனைச் சுற்றியிருந்தார்கள். என்றாலும் எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியுமா? அவன் மனத்தை நேரத்திற்கு நேரம் மாற்றும் கருவிகளாக ஆசைத் தோழர்கள் அமைந்திருந்தனர்.

மஸஹருத்தீன் ஆவலோடு அந்தப் பக்கம் நோக்கினான். மரியம் நிறையப் பூப் பொறுக்கி வைத்திருந்தாள். ஓலைப் பெட்டி மகிழம்பூவால் நிறைந்துவிட்டிருந்தது. கிடைக்கப் போகும் வருவாயை எண்ணி, அவள் இதயம் பூரிப்பால் நிறைந்திருந்தது.

அசைந்து, ஆடி பூப் பொறுக்கி, அவள் கால்கள் அசந்துவிட்டன. மஸஹருத்தீனும் மற்றவர்களும் மரத்தடியை அடைந்தனர். எதையும் எளிதில் செய்யத் தயாராகி விடுவதுதானே இளம் உள்ளம்? நன்மையென்னும் தீமையென்னும் நுணுகியுணரும் ஆற்றல் அந்த நெஞ்சங்களுக்கு ஏது?

மஸஹர் ஏழை மரியத்துக்கு இடுக்கண் விளைவிக்க ஒரு நாளும் நினைத்ததில்லை. ஆனால் துடுக்குத் தோழர்கள் மரியத்தின் மாசற்ற மனத்தை வருத்தத் தூபமல்லவா போட்டுவிட்டனர்! மஸஹர் சிந்திக்கவில்லை.

மஸஹர் அவள் அருகே சென்றான். அவள் விழித்தாள்; திகைத்தாள்.

''மரியம், அந்த மகிழம்பூ எல்லாத்தையும் எங்கிட்டே கொடுத்திடு..'' மஸஹர் அழுத்தமாகவே கேட்டான்.

''எதற்காக உங்கிட்டே கொடுக்கணும்?'' ஓலைப் பெட்டியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே மரியம் கேட்டாள்.

''அப்படித்தான். பேசாமல் பூவைத் தந்துவிடு..''

''தரமாட்டேன்....'' மரியம் தைரியமாகப் பேசினாள். என்றாலும் உள்ளூற அச்சம்தான்.

''கடைசியாகக் கேட்கிறேன். அதைத் தருவாயா, மாட்டாயா?''

''முடியாது..கொடுக்கவே மாட்டேன்.'' மரியம் உறுதியாகச் சொன்னாள். பேச்சு வளர்ந்தது.

ஆத்திரம் அலையாகப் பாய பூப் பெட்டியை பற்றி இழுத்தான். மறுபுறம் மரியமும் இழுத்தாள். இருவரிடையே வலுவான போட்டி! மரியத்துக்கு அழுகையும் ஆத்திரமும் இணைந்து வந்தன! ஓலைகள் சரியுமளவுக்கு உறுதியனைத்தையும் ஒன்று திரட்டிக்கொண்டு பெட்டியை வெடுக்கென இழுத்தாள் மரியம்.

மறுகணம் மஸஹர் 'பொத்' தென்று கீழே விழுந்தான். அவன் கையிலிருந்து பெட்டி நழுவியது. 'மரியத்தால்தானே இந்த அவமானம்? அவளைப் பழி வாங்காமல் விடக்கூடாது! கண்கள் சிவப்பேற, சுற்று முற்றும் பார்த்தான். தேடிய பொருள் பட்டுவிட்டது. ஆமாம், ஒரு கருங்கல்! பளுவான அந்தக் கல்லைக் கையிலெடுத்து எறிந்தான்.

அச்சத்தால் நடுங்கி ஒடுங்கி நின்ற மரியத்தின், வலக்காலை நோக்கிக் கல் பறந்தது! மறுகணம்:—

''ஆ! அம்மா..அம்மா!'' மரியம் எழுப்பிய அவலக் குரல் சுற்றுப்புறமெங்கும் எதிரொலித்தது! மரியம் துடியாய்த் துடித்தாள். காலிலிருந்து ரத்தம் பீரிட்டது. எட்டத்தில் விழுந்த பெட்டியிலிருந்து பூ முழுதும் இறைந்து கிடந்தது. மரியம் நிலத்தில் சாய்ந்தாள். மஸஹருக்கு வஞ்சம் தீர்த்துவிட்ட பெருமிதம் ஒரு நிமிஷம் நிலவியது.

தரையை நனைத்த குருதி அவன் பார்வையில் 'பளிச்'செனப் பட்டது. பீதி அவனைப் பற்றிக் கொண்டது. ஒன்றும் தோன்றாமல் உணர்ச்சி குன்றி நின்றான். கலக்கம் அவனை வாட்டி வதைத்தது. நண்பர்கள் நகர்ந்துவிட்டனர்.

மருண்டு ஓடினான் மஸஹருத்தீன்!

மஸஹர் புரண்டு புரண்டு படுத்தான். பாழும் தூக்கம் அவனைப் பற்றிக்கொள்ள மறுத்தது. மரியத்தின் நினைவு அவனை விட்டு அகலுவதாயில்லை. விந்தி விந்தி நடக்கும் ஒரு பெண்ணுருவை அவனுள்ளம் உருவகித்து வெம்பியது

'மஸஹர்! அல்லா உன்னைச் சும்மாவிடமாட்டார். மரியத்திற்குத் தீங்கிழைத்த உன்னைப் பழி தீர்த்து விடுவார். வினை விதைத்தவன் வினையை அறுக்கத்தான் வேண்டும்' இதயத்தின் ஒரு புறத்திலே இந்தக் குரல் அலைக் கழித்துகொண்டிருந்தது. அவன் செய்துவிட்ட தீங்குக்குப் பிராயச்சித்தம் இல்லவே இல்லையா?

எவரேனும் அறியாது தவறு செய்து பின்னர் அதற்காகப் பச்சாதாபப்பட்டு நற்கருமங்கள் செய்தால் பாவங்களை இறைவன் மன்னிப்பான் என்று குர்ஆன் கூறவில்லையா?

'ஆண்டவனே, என்னைக் காப்பாற்று! மரியத்திற்குத் தீங்கேதுமில்லாமல் எழச்செய்! அறியாது செய்த தவற்றை மன்னித்தருள்!' சின்ன அறிவுக்கு எட்டினமட்டும், எந்நேரமும் இறைவனைப் பிரார்த்தித்தான் மஸஹர்.

இமைகளை மெதுவாகத் தூக்கம் அணைத்தது. இமைகளை இறுக மூடிக்கொண்டான்.

எங்கும் இருள்; மண்டியிட்டவாறு மஸஹர் அமர்ந்திருக்கிறான். அவன் வாய் எதையெதையோ முணுமுணுக்கிறது. பிரார்த்தனை உச்சத்தில் இருக்கிறது!

திடீரென அவன் வதனத்திலே ஜீவகளை ஏன் அரும்பி நடம்புரிய வேண்டும்? இருளிலே ஒளியைக் கண்டவன் போலல்லவா அவன் முகம் மலர்ந்துவிட்டது!

"மஸஹர்..உன் மனக் கருத்து புரிந்துவிட்டது. குற்றம் புரிந்துவிட்டாய். அதனால் நிம்மதியற்றுத் தவிக்கிறாய். தவற்றை யுணர்ந்துவிட்டாய். அதனால் இதயம் இரங்குகிறது. குறை தீர்ந்துவிட்டது. மரியத்தின் வேதனை நீங்கிவிட்டது! அதோ அவள்!"

இந்தக் குரல் எங்கிருந்து எழுந்தது? யார் எழுப்பினார்கள்? நெஞ்சத்துள்ளே எதிரொலிக்குமாறு யார் செய்தார்கள்? எல்லாம் அல்லாவின் அன்புச் சாதனையா?

எங்கே மரியம்? மரியம் எங்கே? புத்தொளி வந்தணைய அவன் விழிகள் எங்கெங்கோ துழாவின.

மஸஹரின் உடல் நடுங்கியது; உள்ளம் படபடத்தது. திடீரெனக் கண் விழித்துக்கொண்டான். இத்தனை நேரம் கண்டனவெல்லாம் என்ன? செவியிலே ஏதோ ஒலித்தனவே! எல்லாம் பிரமைதானா? கண்ட அனைத்தும் கனவா, நினைவா? கற்பனையா, சொப்பனமா? எது? எது..? உடல் முழுவதும் வியர்வை துளித்தது. மஸஹருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் கண்கள் எப்படியோ அழுந்திவிட்டன.

மாலை வந்தது. மஸஹரின் மனம் தூர் வாறிய கிணற்று நீராகத் தெளிந்திருந்தது. மரியத்தைக் காணத் துடித்தான். மகிழ மரத்தடியில் நெடு நேரம் காத்திருந்தான். நான்கு நாட்களாக உதிர்ந்த பூக்களை கவனிப்பாரின்மையால் கருகிக் கிடந்தன. எதையோ எதிர்பார்த்து அவன் ஏங்கிக் கிடந்தான்.

ஒரு நிமிஷம்..இரண்டு நிமிஷங்கள்!

அந்தச் சிறு பெண் மெதுவாக நடந்து வந்தாள்.

அவன் முகத்திலே ஒளி! அவள் பிழைத்தாள்.

மரியம் வந்துவிட்டாள்! நல்லவேளை, அவள் நடையிலே ஊனமில்லை. அப்படியானால் அவள் குணமடைந்துவிட்டாளா? அல்லாவின் கருணைதானா? "மரியம்.." மஸஹரின் கண்டத்திலிருந்து உணர்வுக் குரல் ஓங்கியது. அன்பு, ஆதாரம், இன்பம் அனைத்தும் அறியக் குழைந்து நின்றன. மரியம் அமைதியாக நின்றாள்.

"என்னை மன்னிப்பாயா, மரியம்? உணராது உனக்குக் கொடுமை இழைத்துவிட்டேன். தேவையற்ற மகிழம்பூவுக்காக வீண் வம்பை விலைக்கு வாங்கினேன். உனக்கு அது இடுக்கண்ணாயிற்று. மறந்துவிடு, மரியம்!.."

அன்பு பரிணமித்துவிட்டதற்கு அறிகுறியாகவோ என்னவோ, அவள் மெல்லத் தலையசைத்தாள். நன்றிக் கண்ணீர் மஸஹரின் கண்களிலிருந்து உருண்டது.

மகிழம்பூ சொரிந்தது! அதற்குத் தான் எத்தனை சக்தி! இளம் நெஞ்சங்களிலே அன்பும் அமைதியும் படர்ந்தன! அல்லாவின் கருணை!

# மன்னிப்புக் கேள்!

**ரமீலன்**

1

மாலை நேரத்தில் மஞ்சள் நிற மணல் பரப்பைப் பொன் நிற மாக்கிக்கொண்டிருந்தான் கதிரவன். காற்று வீசியது. நெல் பயிர்கள் தலையாட்டின. ஒன்றோடொன்று நெருங்கி ஏதோ ரகசியம் பேசின.

ஊர் அருகே பாய்ந்துகொண்டிருந்த காட்டாற்றின் அக்கரையில் உயர்ந்த சிறு குன்றின் மீது அமைந்திருந்த தமது பர்ணசாலையை நோக்கி வெகு வேகமாகப் போய்க்கொண் டிருந்தார் சோழ நாட்டு அரண்மனையைச் சேர்ந்த குருதேவர். அவருடைய முகத்திலே பொலிவு இருந்தது. நடையிலே மிடுக்கு இருந்தது. பாதரட்சைகள் தரையின்மீது வெகு வேகமாகத் தாவித் தாவிச் சென்றன. அவர் கரையை அடைந்து விட்டார். இனி காட்டாற்றைக் கடந்து அக்கரை செல்லவேண்டும்.

குளுமையோடு வீசிய காற்றின் இனிமையை ரசித்தவண்ணம் கரையிலே சிறிது நேரம் நின்றார். சுற்றுமுற்றும் பார்த்தார். அவருடைய கண்கள் யாரையோ, எதையோ தேடின. ஆம். வழக்கம் போல அங்கே காட்சியளிக்கும் படகோட்டியைக் காணவில்லை. படகு மட்டும் நீரில் அசைந்தாடிக்கொண்டிருந்தது. இரண்டு மூன்றுமுறை குரல் கொடுத்துப் பார்த்தார். பதிலில்லை.

அவருடைய சிந்தனைச் சக்கரம் சுழன்றது.

'அக்கரைக்குப் போவதா? வேண்டாமா?' சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தார். படகோட்டி இல்லாவிட்டால் என்ன? தாமே படகைச் செலுத்தி விடலாம் என்று தீர்மானித்தார்.

அதன்படியே படகு கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்த்தார். படகிலே ஏறினார். துடுப்பு நீருக்குள் முழுகி முழுகி எழுந்தது. படகோட்டுவது என்பது அவருக்கு ஒரு புதிய அநுபவம். என்றாலும் எப்படியும் அக்கரை சேர்ந்து விடுவோம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆனால் அவர் எண்ணம் நிறைவேறவில்லை. நம்பிக்கை தளர்ந்தது.

பாதி வழியில் படகு ஒரு சுழலில் மாட்டிக்கொண்டது. படகைத் தள்ளத் தம்மால் இயன்றதைச் செய்து பார்த்தார். முடியவில்லை. கைகள் சோர்ந்தன. துடுப்பு கையை விட்டு நழுவி ஆற்றிலே விழுந்துவிட்டது. படகும் தண்ணீரில் சாய்ந்து கவிழ்ந்தது. நடப்பது நடக்கட்டும் என்ற நினைப்பில் கண்களை இறுக மூடிக்கொண்டார். அவரும் நீருக்குள் மூழ்கினார். அவர் மூழ்கிய இடத்தில் நீர்க் கொப்புளங்கள் தோன்றின. சுயநினைவை இழந்து விட்டார் குருதேவர்.

2

மறுநாள் காலையில்தான் அவருக்குச் சுயநினைவு வந்தது. மெல்லக் கண்களைத் திறந்த அவர், தம் ஆசிரமத்தில் இருப்பதை உணர்ந்தார். சுற்று முற்றும் பார்த்தார். அவருடைய மாணவர்கள் அவரைச் சுற்றிக் குழுமி இருந்தனர். மாணவர்களிடையே இருந்த ஒரு புதிய சிறுவனைக் கண்டதும் ஆச்சரியத்தால் அவர் கண்கள் அப்படியே குத்திட்டு நின்றன. அவன் யார்?

இதற்கு முன்பு ஒரு தடவை அவனைக் குருதேவர் பார்த்திருக்கிறார். அவன் சேர நாட்டைச் சேர்ந்தவன். குருதேவரிடம் கல்வி கற்க வேண்டி முன்பு வந்திருக்கிறான். ஆனால் அயல் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பது ராஜத்துரோகம் ஆகும் என்று

கூறி அவனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் குருதேவர்.

தன்னையே கூர்ந்து கவனிப்பதைக் கண்டதும் அந்தச் சிறுவன் குருதேவரின் காலடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, கண்ணீர் உகுத்தான். மாணவர்களில் ஒருவன், "இவன்தான் சந்திரஹாஸன்; தங்களை நீரிலிருந்து காப்பாற்றியவன்" என்று கூறினான்.

"குழந்தாய்! நீ செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். உயிரையே காப்பாற்றிய உன் உதவிக்கு நான் செய்யும் எந்த உதவியும் ஈடாகாது." அவனைத் தம் மார்போடு அணைத்துக்கொண்டார்.

"குருதேவா, இப்போதாவது என்னைத் தங்களுடைய மாணவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். இதைத் தவிர நான் வேறு எதையும் தங்களிடம் விரும்பவில்லை."

சந்திரஹாஸனின் வார்த்தைகள் குருதேவரின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன. "சந்திரா, நீயே சொல். நான் உனக்குப் பாடம் சொல்லித் தரவேண்டும் என்கிறாயே, இது ராஜத் துரோகமாகாதா? நான் எதைச் செய்ய இயலாது என்று கூறுகிறேனோ, அதையே செய்யச் சொல்கிறாயே!"

"தாங்கள் கூறுவது ஒருவகையில் உண்மை. தங்கள் செய்கை ராஜத் துரோகம் ஆகாமல் இருக்க ஒரு வழி இருக்கிறது!"

"உண்மையாகவா?"

"ஆமாம்; தங்களிடம் நான் கற்றுக்கொள்ளும் கல்வி சோழ நாட்டிற்கு எவ்விதத் தீங்கும் செய்யாது என்றால் அப்பொழுது அந்தக் கல்வியைப் போதிப்பது ராஜத்துரோகம் ஆகாது அல்லவா?"

"ஆம்."

"அப்படியானால் தாங்கள் எனக்கு கற்றுக் கொடுக்கும் கல்வியால் சோழ நாட்டினருக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது என்று உறுதி கூறுகிறேன்."

சந்திரஹாஸன் கூறியதில் உண்மை இருந்தது. அதை ஒப்புக்



கொண்டு அவனைத் தம் மாணுக்க ஞக ஏற்ருர் குருதேவர். அவன் சேரநாட்டினன் என்ற செய்தி வேறு யாருக்குமே தெரியாதபடி பார்த்துக்கொண்டார் குருதேவர். மற்ற மாணவர்களைவிடக் கல்வியில் அதிக ஊக்கம் காட்டி வில்வித்தை, குதிரை ஏற்றம் முதலான படைக் கலப் பயிற்சிகளையெல்லாம் அடைந் தான் சந்திரஹாஸன். மற்ற மாண வர்களுக்குச் சொல்லிக் கொடுக் காத பல விஷயங்களைச் சந்திரஹாஸ னுக்குக் கற்றுக்கொடுத்தார் குரு.

பத்தாண்டுகள் ஓடி மறைந்தன.

சந்திரஹாஸனின் படிப்பு முடி வடைந்தது.

குருதேவரிடமிருந்து விடை பெற்ருன். தன் உயிருள்ள வரை யில் குருதேவரை மறக்கமாட்டேன் என்றும் அவருக்குச் சேவை செய்ய எப்போதும் காத்திருப்பதாகவும் கூறிவிட்டுச் சென்ருன் சந்திர ஹாஸன்.

3

சந்திரஹாஸன் விடைபெற்றுச் சென்று ஒரு மாதம்கூட ஆகி இருக் காது. சோழநாட்டிற்கும் சேர நாட்டிற்கும் திடீரென்று போர் மூண்டது. சோழ நாட்டரசர் இந்தத் திடீர்த் தாக்குதலை எதிர் பார்க்கவில்லை. அவரிடம் போதிய படைவலிமை இல்லாமையால் பலம் சிதறுண்டது. சேரநாட்டுப் படைவீரர்கள் சோழ நாட்டைச் சூரையாடினர்.

அன்று பௌர்ணமி.

குருதேவர் சற்றே கண்ணயர்ந் திருந்தார்.

திடீரென்று கிளம்பிய கூக்குர லும் ஆரவாரமும் அவரைத் தட்டி எழுப்பின. அவர் கண்ட காட்சி ஆசிரமத்திற்குத் தீ வைக்கப்பட் டிருந்ததுதான். மக்கள் நான்கு புற மும் பதறி ஓடினர். மாணவர்கள் தங்கள் உயிர் தப்பினுல் போதும் என்று ஓடிவிட்டார்கள். குருதேவர் தன்னந்தனியாக நின்றிருந்தார்.

பதறியோடும் மக்களைச் சவுக் கால் அடித்த வண்ணம் நான்கு புறமும் காட்சியளிக்கும் சேர நாட்டுக் குதிரை வீரர்கள் குரு தேவரை நெருங்கினர். அந்த வீரர் களுக்குத் தலைமை தாங்கி வந்த வனைக் கவனித்தார். கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டே கவ னித்தார். சந்தேகமே இல்லை. சந்திரஹாஸன்தான் அவன். அவஞ இப்படி மாறிவிட்டான்? குரு தேவரால் நம்ப முடியவில்லை. அதற்குள் குதிரைவீரர்கள் அவரை நெருங்கிவிட்டனர்.

ஆனல் குதிரை வீரர்களின் தலைவன் குருதேவருடன் பழகிய வனுகவே நடந்து கொள்ளவில்லை. அவனுடைய முகத்தில் கோபம் ஜ்வலித்தது. அவன் தன் வீரர்கள் பக்கம் திரும்பினுன். "ஹ..ஹ்.. ஹ..ஹ் ஹா! வீரர்களே, இந்தக் கிழம்தான் நமக்கு எதிராகப் படை திரட்டி வீரர்களுக்குப் படைக்கலப் பயிற்சி அளிப்பவன். இவனை இழுத் துச் செல்லுங்கள். நாளைக்கு இந் தப் பிள்ளைப்பூச்சியின் உயிருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம்!"

'யார் இப்படியெல்லாம் கட் டளை இடுவது? நதியில் ஆபத்தி லிருந்து காப்பாற்றிய சந்திர ஹாஸனு? மற்ற மாணவர்களுக்குக் கூடக் கற்றுக்கொடுக்காத பல விஷ யங்களை யாருக்குக் கற்றுக் கொடுத் தேனே அந்தச் சந்திரஹாஸனு? உயி ருள்ள வரையில் என்னை மறக்க மாட்டேன் என்றும் எனக்குச் சேவை செய்ய, தான் எப்பொழு தும் காத்திருப்பதாகவும் கூறி விடைபெற்றுச் சென்றவனு இப்ப டிக் கொடியவனுக மாறிவிட்டான்? தன்னுடைய குருவையேசொல்லால் அவமதித்து, கட்டி இழுத்துச் செல் லவும் கட்டளை இடும் அளவிற்கு மாறிவிட்டானே சந்திரஹாஸன்?' இதையெல்லாம் நினைக்க நினைக்க குருதேவரின் உள்ளம் கொதித்தது. அவன் செய்த துரோகத்தை எண்ணிக் கண்ணீர் உகுத்த வண்ணம் குதிரை வீரர்களைப் பின் தொடர்ந்தார் குருதேவர்.

4

மறுநாள்.

சேர நாட்டுப் பாசறையின் ஒரு மூலையில் தூணில் கட்டப்பட் டிருந்தார் குருதேவர்.

சந்திரஹாஸன் வீரர்களைப் பார்த்து நகைத்தபடியே, ''ஹ..ஹ்..ஹா! பாருங்கள் இந்தப் பிள்ளைப் பூச்சியை! நமக்கு எதிராகப் படை திரட்டுகிறான், மக்களுக்குப் படைக்கலப் பயிற்சி தருகிறானும். சோழநாட்டு மக்களை நம் படைக்கு எதிராகத் தட்டி எழுப்புகிறானும். ஹ..ஹ்..ஹா ஏய்! எங்கே அந்தச் சாட்டை!'' என்றான்.

வீரர்களில் ஒருவன் சாட்டையைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தான்.

சாட்டை காற்றில் சுழன்றது. 'பளார்' என்று சாட்டை மடங்கி ஒலித்தது. ஆனால் மேலே ஓங்கிய சாட்டை அப்படியே நின்றுவிட்டது. குருதேவரின் மேல் விழவில்லை. சாட்டையைச் சந்திரஹாஸனுக்குப் பின்னே நின்றிருந்த ஓர் உருவத்தின் இரும்புக் கை தடுத்துப் பிடித்திருந்தது. குருதேவர் தம் கண்களை அகல விரித்துக் கொண்டு சந்திரஹாஸனையும் அந்த உருவத்தையும் வியப்போடு பார்த்தார். அந்த உருவம் யார்?

அந்த உருவம் கூறிற்று, சந்திரஹாஸனை நோக்கி. ''கண்ணா! என்ன செய்ய முற்பட்டுவிட்டாய்! இவரையா இப்படி வாட்டி வதைக்கிறாய்? இவர்தானடா என் குரு. எனக்குப் படைக்கலப் பயிற்சி தந்த குருதேவர்!''

''என்ன? உன் குருவா! நிஜமாகவா அண்ணா? இது எனக்கு முன்பே தெரியாதே. மன்னித்து விடு, சந்திரஹாஸா!''

''கண்ணா, மன்னிப்புக் கேள். என்னிடமல்ல. அதோ நிற்கிறாரே அந்தக் குருதேவரிடம்.''

இருவரும் குருதேவரின் முன்பு மண்டியிட்டு வணங்கினர். இருவரையும் ஆனந்தக் கண்ணீர் சிந்த, கையினால் பிடித்து எழுந்திருக்கச் செய்து குருதேவர் கூறினார்:

''சந்திரஹாஸா. மன்னிப்புக் கேட்கவேண்டியவன் நான். உன் தம்பி கண்ணனை நீ என்று நினைத்து எவ்வளவு மனத்திற்குள்ளாகவே சபித்தேன் தெரியுமா?''

''குருதேவரே, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நானும் என் தம்பியும் இரட்டைக் குழந்தைகள். ஆகவே அவனை நானாக நினைத்து விட்டீர்கள். அவ்வளவு தான். அவன் செய்த குற்றத்தையும் மன்னித்து விடுங்கள். நல்லதொரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன். நம் இரு நாடுகளும் சமரசமாகிவிட்டன.''

அடுத்த கணமே குருதேவரைக் கண்ணனும் சந்திரஹாஸனும் தங்கள் தோளில் சுமந்துகொண்டு ஆனந்தக் கூத்தாடினர்.





காப்டன் சேஷாத்திரிநாதன்

# கழுதை கெட்டால் குட்டிச்சுவர்

முன்பின் யோசனையில்லாமல் பெற்றோர் நம்மை, "ஏ கழுதை!" என்று கூப்பிட்டுவிடுவார்கள். இதனால் பெற்றோர் வெட்கித்துப் போகவேண்டியது போக, நமக்கு எவ்வளவு ரோஷம் வருகிறது! ஆனால், ரோஷம் தைக்க வேண்டிய காரணமில்லை. அதைப் பாராட்டுச் சொல்லாகவே கருதிக் கொள்ளலாம்.

பொறுமைக்குக் கழுதையைப் போல் ஒரு பிராணியும் இல்லை. நன்றியாயிருப்பதில் நாய்க்குப் பிறகு கழுதைதான். ஆனால் நாயைக் கொண்டாடுவதுபோல் மனிதன் கழுதையைக் கொண்டாடுவதில்லை.

ஒரு வண்ணானிடம் ஒரு கழுதை இருந்தது. ஒரு நாயும் இருந்தது. கழுதை வண்ணானுடைய பெரிய மூட்டைகளைச் சோம்பலில்லாமல் சுமந்துகொண்டு போயிற்று. தீனிக்கு வீட்டில் காத்திராமல் முள்ளுச் செடியையும் கிழிந்த காகிதத்தையும் துணியையும் தின்று பசி தீர்த்துக் கொள்ளும். நாள் முழுதும் இட்ட வேலையைச் செய்துகொண்டேயிருக்கும். வெயிலையும் மழையையும் பொறுத்துக்கொள்ளும். அப்படி இருந்தும் வண்ணான் முதுகில் கொம்பு கொண்டு அடிப்பான்.

நாய் ஒரு வேலையும் செய்யாமல் வண்ணான் பின்னாலேயே போகும். கழுதையை நோக்கிக் குரைக்கும். வீட்டுக்கு வந்ததும் வண்ணான் மடியில் கால் வைத்துக் கொஞ்சும். முகத்தில் நக்கியும் கொடுக்கும். இதைக் கண்ட கழுதைக்குப் பொறாமை பொங்கிற்று.

ஒரு நாள் நாய் ஊர் சுற்றப் போயிருந்தது. இதுதான் சமயம் என்று எண்ணி, கழுதை வண்ணானிடம் வந்து மடியில் கால் வைத்து முகத்தை நாவால் நக்கப் போயிற்று. "சீ! போ! கழுதை!" என்று சொல்லிக் கம்பால் அடித்து ஓட்டினான்.

நாய் இதற்குள் திரும்பி வந்துவிட்டது. கழுதையிடம், "என்ன செய்தி?" என்று கேட்டது. கழுதை நடந்ததைச் சொல்லிற்று. "சரி, நீ என் வேலையைச் செய், உன் வேலையை நான் செய்கிறேன்" என்றது. "ஆகட்டும்" என்றது கழுதை. இரவில் வீட்டுக்குக் காவலாயிருந்தது கழுதை. திருடன் வந்தான். அதைக் கண்டு கழுதை கனைத்தது. வண்ணான் எழுந்தான். "கழுதை! என்னைத் தூங்கவிடாமல் ஏன் கத்துகிறாய்?" என்று சொல்லி, கழுதையை அடித்தான். திருடனோ அதற்குள் தப்பி ஓடிவிட்டான்.

மறுநாள் கழுதை நாயை நோக்கி, "என்னைக் கம்பால் அடித்தான் வண்ணான்" என்று சொல்லிக் கண்ணீர்விட்டது. "உன் வேலையை நான் பார்த்துக்கொள்கிறேன். முதலில் நீ பாதி வழி

எடுத்துக்கொண்டு செல். ஒரு மரத்தினடியில் மூட்டையை வைத்துவிடு. நான் வந்து எடுத்துக் கொண்டு போகிறேன்'' என்றது. கழுதை அதை நம்பியது. நாய் சொன்னதுபோல் மரத்தடியில் மூட்டையைக் கொண்டுபோய் வைத்தது. நாய் வரவில்லை. ஆனல் வண்ணுன் வந்து மூட்டையைத் தள்ளிவிட்டு, கழுதை நிற்பதைப் பார்த்தான். முதுகு இரத்தவிளாறு ஆகும்படி முதுகில் அடித்துவிட்டான். மூட்டையைத் தூக்கி முதுகில் வைத்துத் துரத்தினுன். பொறுமையுள்ள கழுதை, தலை குனிந்து ஏமாற்றத்தை மறந்து விட்டுச் சென்றது.

கழுதைக்குப் புத்தியுண்டு, ஆனல் அந்தப் புத்தி அதற்குப் பயன் படுவதில்லை. உப்பு மூட்டையைத் தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருந்த ஒரு கழுதை ஒரு நாள் ஆற்றில் இறங்கிச் செல்ல நேர்ந்தது. ஆற்றுத் தண்ணீர் உப்பைக் கரைத்தது. கரையேறிய பிறகு கழுதைக்குப் பாரம் குறைந்தது. கழுதை காரணம் அறிந்து தினமும் ஆற்றில் இறங்கி உப்பைக் கரைத்துக்கொண்டது. எஜமான் உப்புக்குப் பதில் மண்மூட்டையை ஏற்றினுன். கழுதை வழக்கம்போல் தண்ணீரில் இறங்கியது. மூட்டையின் கனம் அதிகமாயிற்று. கழுதையின் தந்திரம் பலிக்கவில்லை.




கழுதையை அதிகம் விரட்டினுல் வேலை செய்ய முடியாமல் கால் மடங்கி விழுந்து விடும். இதைச் சண்டித்தனம் என்றெண்ணி அதை மேலும் இம்சிப்பார்கள்.

கழுதையை இயற்கையான வேகத்தில் நடத்திச் சென்ருல், அது வெகுதூரம் சளைக்காமலேசெல்லும்; கல் முள்ளென்றும் பார்க்காது. மலைமேல் வேண்டுமானுலும் ஏறும்.

'வரவர மாமியார் கழுதை போலானுளாம். ஊர்கிட்டே வரும்போது ஊளையிட்டு வந்தாளாம்' என்று ஒரு வசனம் இருக்கிறது.

ஒரு மாமியாருக்கு ஒரு மருமகள். அவள் மாமியை ரொம்பவும் படுத்தினுள். ஒரு நாள் காட்டுக்கே துரத்திவிட்டாள். அங்கே ஒரு குளம். குளத்தில் ஒரு தேவதை கிழவி உருவம் எடுத்துக்கொண்டு நீராடினுள். ''எனக்கு முதுகு எட்டவில்லை. நீ தேய்த்து விடேன்'' என்ருள். மாமியார் தேய்த்தாள். அவள் குணத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு ஆபரணங்களும் பட்டாடையும் பூட்டி வீட்டுக்கு அனுப்பினுள். மருமகள் அதைக் கண்டு ரொம்பச் சந்தோஷமாய் வரவேற்ருள்.

அண்டை வீட்டுக்காரிக்கு இதைக் கண்டு ரொம்பப் பொருமை, தன் மாமியாரையும் காட்டுக்குக் கொண்டுபோய் விட்டாள். அப்பொழுதும் குளத்திலிருந்து தேவதை கிழவியாகத் தோன்றினுள். மாமியார்க்காரி, ''நீ யாரு? போ! சனியன்!'' என்று சொன்

ளுள்: ''நீ கழுதை ரூபத்தோடு வீடு போய்ச் சேருவாய்'' என்று தேவதை சபித்துவிட்டாள். தன் உருவம் குளத்தில் தெரிந்தது. அது கழுதையைப் போல் இருந்தது. பயந்து வீட்டுக்கு ஓடிப் போனுள். வீட்டை அடைந்ததும் கழுதையைப்போல் கத்தவும் தொடங்கினுள்.

மாமியாரை நினைக்கும்போது இது அநியாயமாய்த் தோன்றுகிறது.

கழுதைக் குட்டி குதிரைக் குட்டியைவிட அழகாயிருக்கும். குதித்துக் குதித்து ஓடும். கழுதைக் குட்டிக்குப் பச்சைப் புல் கொடுத்து தாய்ப் பாலும் ஊட்டி வளர்த்தால் நல்ல கழுதையாய் நமக்குச் செலவில்லாமல் சுமை சுமக்கும்.

கழுதைப் பால் ரொம்பவும் இனிப்பாயிருக்கும். பசுவின் பாலைக் காட்டிலும் குழந்தைக்கு நல்லதாம். ருசியாய்க் குடிக்குமாம். 'அழுத பிள்ளையும் சிரிக்குமாம், கழுதைப் பாலைக் குடிக்குமாம்' என்று ஒரு வசனம் உண்டு. கழுதைப் பால் குழந்தைக்கு நல்லதாயிருந்தும் நாம் அதைக் கேவலமாய் நினைக்கிறோம். இது கழுதையின் துரதிருஷ்டம்தான்.

கழுதையைப் பற்றி முதல் முதல் ஜோதிஷம் சொல்லி, பிரபல ஜோதிஷராகிவிட்டார் ஒருவர். ஒருவரை அவர் மனைவி, ''ஜோதிஷம் சொல்லியாவது சம்பாதித்துக் கொண்டு வாயேன்'' என்று சொன்னுள். அதே சமயம் அந்த வழியாக ஒரு வண்ணன் கழுதையைக் காணவில்லையே என்று தேடிக்கொண்டு வந்தான். இவரைக் கண்டு, ''என் கழுதையை எங்கேயாவது கண்டாயா?'' என்று கேட்டான். ''கழுதை கெட்டால் குட்டிச் சுவர்'' என்று விடை கூறவே, குட்டிச் சுவரின் அருகே கழுதையைக் கண்டு பிடித்தான். அவன் அந்த ஊர் ஜமீன்தாருக்குச் சலவை செய்யும் வண்ணுனுகையால் அவன் ஜோதிஷரைப் பற்றி ஜமீன்தாரிடம் சொன்னுன். அங்கும் இம்மாதிரி ஜோதிஷம் சொல்லிப் பணம் சம்பாதித்து மனைவிக்குக் கொண்டு வந்து கொடுத்தார் என்று கதை.

இவ்வளவு சாதுவான பிராணியாகிய கழுதையைக் கிராமங்களில் பிள்ளைகள் ரொம்பவும் துன்புறுத்துவார்கள். வாலில் பனை ஓலையைக் கட்டுவார்கள். அது சலசலவென்று சத்தம் போடும். கழுதை பயந்து நிற்காமல் கத்திக் கொண்டே ஓடும்.

உலகில் ஒழுங்காயும் விசுவாசமாயும் வேலை செய்பவர்கள், ஒருவருக்கும் கனவிலும் கேடு நினைக்காதவர்கள் சில முட்டாள்களுடைய விஷமச் செயல்களால் துன்புறுத்தப் படுவார்கள். அதைக் கண்டு அந்த முட்டாள்கள் இன்புறுவார்கள். இதைப் போன்றதே கழுதையின் துன்பங்கள்.

கழுதை மிகவும் சாதுவான பிராணி. ஆனுல் புத்தி சற்றுக் குறைவுதான். எஜமானனுடைய கட்டளைகள் புத்திக்கு ஏருது. ஆனுல் வழக்கமான வேலையை ஒழுங்காய்ச் செய்துவிடும். இதனுலேயே 'கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னுலும் அவயக் குரல் ஒழிய அங்கொன்றுமில்லை' என்பார்கள்.

கழுதையின் குரல் பரிதாபமானது. நாம் விக்கி விக்கி அழுவது போல் விட்டு விட்டுக் குரல் எழுப்பும். குரலிடுவது சாதாரணமாய் ஆண் கழுதைதான். பெண் கழுதையிடம் அன்பு கொண்டு எழுப்பும் குரல். பெண் கழுதைக்கு இது நல்ல சங்கீதமாகத் தோன்றலாம். ஆனுல் நமக்குச் சகிக்க முடியாது. சங்கீத ஞானம் இருப்பதாக எண்ணிச் சிலர் பாட ஆரம்பித்து, அதை நாம் நிறுத்தவேண்டுமென்று எண்ணினுல், 'இங்கே எங்கேயாவது வண்ணுன் இருந்துவிடப் போகிருன்' என்று சொன்னுல் போதும்; நிறுத்திவிடுவார்கள்.

ஒரு விஷயத்தில் கழுதையின் கனைப்பை விரும்புவோம். நல்ல காரியத்தை எண்ணிப் புறப்படும்போது கழுதையின் கனைப்பு நல்ல சகுனமாகும். இதைக் கழுதை தெரிந்துகொள்ளுமானுல் மிகவும் சந்தோஷப்படும்.

கதை: 'ஆர்வி'

# கடற் புலி

சித்திரம்: ஸாமி




இளவரசி கடற்கரையை அடைந்து ........
இதோ காலடி பதிந்திருக்கிறது! தலைவன் தான் என்னைக் காப்பாற்றி இங்கே கொண்டு வந்திருக்க வேண்டும்! எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்கவேண்டும்.
கடற்புலி புகை தெரிந்த திசையை நோக்கி நடந்து செல்கிறான் ........
மனித சஞ்சாரத்தையே காணுமே!
அடுத்த கணம் செடி கொடிகள் சலசலக்கின்றன ........
நான் உங்கள் பகைவன் அல்ல!!
கூட்டத்தில் ஒருவன் கையை அசைக்க, இருவர் முன்வந்து கடற்புலியின் கையைக் கட்டி, அழைத்துச் செல்கிறார்கள் ........

# பாசத்தை வென்ற அரசர்

**'சுகி'**

[குறிப்பு: லார்டு கிளைவ், சர் அயர் கூட், ஜெனரல் ஸ்மித் போன்ற வெள்ளைக் காரர்களும் மெச்சிய போர் வீரனுன வீரன், கர்நாடக ராஜ்யத்தை ஆண்டான். அவன் பெயர் ஹஸரத் துல்லா. அந்த அரசன் வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது.]

யாசகம் கேட்டு வருகிற வர்கள் போகும் போது சுமக்க மாட்டாத தங்க நாணயங்களுடன் போவார்கள். அறிவாளிகள் அரசர் ஹஸரத்துல்லாவைச் சந்தித்தால், தோள் கனத்துப் போகும்! அவ்வளவு பரிசில் கள் வழங்குவார். பச்சைமரங்களைக் கூட வெட்டச் சம்மதங்கொள்ளாத சிறந்த பண்புள்ள அரசர். வேலைக் காரன், எஜமான் என்ற பேதமோ, ஆசிரியர், மாணவன் என்ற வித்தியாசமோ காட்டக்கூடாது என்ற கொள்கை உள்ளவர்.





ஒருவர்: பணம்னு கேட்டு என் பையன் ஒரு காகிதம்கூட எழுதமாட்டான்!

மற்றவர்; அப்படியா? பணம்னு கேக்காமெ என் பையன் ஒரு காகிதம்கூட எழுத மாட்டான்!

---

உயர்ந்த பண்புகள் உள்ளவர். உத்தமமான குணமும் நேர்மையும் உடைய அரசர் எதிர்பாராத சமயம் தர்பாருக்கு வந்தார். அங்கே காவலிருந்த ஜவான் தூங்கிக் கொண்டிருந்தான். என்ன செய் தார் தெரியுமா? தலையணை ஒன்றை எடுத்து அந்த ஜவானுக்கு வைத்து விட்டுப் போனாராம்.

தான் அரசன் என்ற அகம் பாவம் இல்லாத அரசர் அவர். அதனால்தான் பாசத்தையும் வென்று உம்தத்துல் உம்ரா என்ற தம்முடைய பையனுக்கும் அவர் நியாயம் வழங்கினார்:

ஒரு நாள்:

ஹஸரத்துல்லா, தமது தர்பாரை விட்டு வெளியே கோட்டைக்குள் வந்துகொண்டிருந்தார். அரசர் வருகையைக் கவனித்ததும், மற்ற வர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள். வீதியே வெறிச்சோடி யிருந்தது.

சுவருக்கு அப்பால் ஒரு மூலை யில் சிறுவன் ஒருவன் அழுது புலம் பிக்கொண்டிருந்தான். அழுகை யைக் கேட்டதும் அவன் அருகே அரசர் வந்தார். அவனுக்கு அரச ரைத் தெரியும். சும்மா பார்த் தும் பாராததுபோல அழுது கொண்டே இருந்தான்.

''பையா, ஏன் அழுகிறாய்?''

அவர் பார்த்தபோது அவன் துணிமணியில் ரத்தக் கறையும் மண்டையிலிருந்து ரத்தம் சொட்டு வதும் தெரிந்தது. திடுக்கிட்டுப் போனார். அவ்வளவு கடுமையாக யார் அடித்தது? அதுவும் சின்னஞ் சிறு பையன்!

''அடித்தால் அழமாட்டார் களா?'' என்றான் பையன்.

''அடி பலமாக இருக்கிறது. யார் உன்னை இவ்வாறு காயப்படுத் தியது?''

''சொன்னால் நீங்களும் என்னைத் தான் அடிப்பீர்கள்!''

அரசர் திடுக்கிட்டார். யார் அடித்திருக்க முடியும்?

''சொல், தம்பி!''

''சொல்ல மாட்டேன், ஹுசூர்!''

''மௌல்வி அடித்து விட் டாரா?''

''இல்லை.''

அன்பாகப் பையன் அருகில் போய், அவன் முதுகைத் தடவிக் கொடுத்தார். பையன் உள்ளம் இளகி விட்டது. அவன் பிடித்த பிடிவாதம் மறைந்து உண்மையை மெதுவாகச் சொல்லிவிடத் தீர் மானித்தான்.

''சொல்லுடா, நீ கொத்தனார் பையன்தானே?''

''ஆம், ஹுசூர். என்னை அடித்தது இளவரசர் உம்தத்துல் உம்ரா.''

அரசர் அசந்து விட்டார். தமது அன்பிற்கும் ஆசைக்கும் இருப்பிடமான கடைக்குட்டியின் பெயரைக் கேட்டபோது அவர் மனம் சிறிது சங்கடப்பட்டது. மறு கணம் சமாளித்துக்கொண்டார்.

''அவனா? எதற்காக அடித் தான்?''

அடிபட்ட பையன் விவரங்கள் சொன்னான்.

''கல்லால் அடித்தானா?''

''கையிலுள்ள கம்பினால் ஓங்கி அடித்து விட்டான். ரத்தம் கொட்டுகிறது.''

''அழாதே'' என்றார் மறுகணம். அவர் பரபரப்பாக அரண்மனைக்குள் ஓடினார். வேலைக்காரர்கள் பயந்து வந்து வெளியே காத்து நின்றனர். உள்ளே ஒளிந்து கிடந்த இளவரசனை இழுத்துவரச் சொன்னார். அவனும் சிறுவன்தான். விளையாட்டாகக் காயப்படுத்தி விட்டான். ரத்தம் வந்துவிட்டது.

குற்றவாளி, நிரபராதி இருவரையும் அரசரே, கோர்ட்டுக்குள் - அரண்மனையின் ஒரு பகுதியில் இருக்கும் இடம் - இழுத்துப் போனார்.

நீதிபதி அரசர் வருவதைக் கண்டு மரியாதைக்காக எழுந்தார்.

''நீதிபதி அவர்களே, இந்தப் பையன் ஆஜம் குற்றம் செய்யாத போது, இவன்-என் மகன்-குற்றம் செய்து மண்டையை உடைத்து விட்டான். இதற்கு முறைப்படி என்ன தண்டனை வழங்க வேண்டுமோ, அதைச் செய்யுங்கள்.''

அரசரே தம் மகன் குற்றவாளி என்று வாதாடுகிறார்.

''மகராஜ்! குற்றம் செய்திருப்பது உண்மை. இருவரும் அறியாப் பருவத்தினர். ஆகவே, தண்டனைக்கு அவர்களை உள்ளாக்குவதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. பகுத்தறிவும் வயசும் இல்லாதவர்கள்'' என்றார் நீதிபதி.

''நீதியில் இவர்களுக்கு இடம் இல்லையா?''

''அறியாப் பருவத்தினருக்கு தண்டனை கொடுக்கும் உரிமை கோர்ட்டுக்கு இல்லை'' என்று நீதிபதி சொல்கிறார். ராஜ ஆக்ஞைக்கும் மறுப்புக் கொடுத்தார்.

''சட்டத்தில் இடம் இல்லாது போகட்டும். நீதியில் இடம் வைக்க வேண்டும். இந்தக் கர்நாடகத்தின் அரசன் சொல்கிறேன். தண்டனை ஏற்றுக்கொள், மகனே!'' என்றார். மறுகணம் அடிப்பட்ட பையனைப் பார்த்து. ''தம்பி, உன்னை எவ்வாறு ஓங்கி அறைந்தானோ அதைப் போலவே நீயும் அதே வேகத்தில் அவனை அடிக்கலாம். இதுதான் நீதி'' என்றார்.

கொத்தனார் மகன் அவ்வாறே ஓங்கி யடித்தான். அதை மனம் சுளிக்காது கண்டு ஆனந்தப்பட்டார் அரசர்.

''நாட்டிலே, 'நவாப்' நீதி குன்றாதவர்; மகனுக்கே இப்படிப் பட்ட நீதி யென்றால் மற்றவருக்கு எவ்வளவு தண்டனை கிடைக்கும்?'' என்று பேசிக் கொண்டனர். போக்கிரிகள்கூட அவருடைய அரசாட்சியில் தீச்செயல்கள் புரிய அன்று முதல் அஞ்சினார்கள்.






# நீங்களும் நானும்

[இந்தப் பகுதிக்கு இப்பொழுது ஏராளமான கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. முடிந்த வரையில் வரிசைக் கிரமமாகப் பதில்கள் தரப்பட்டு வருகின்றன. தங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே என்று மீண்டும் கடிதம் எழுதாதீர்கள். இரண்டு இதழ் பொறுத்திருந்து பாருங்கள். அதற்குள் விடை வர வில்லையானால் வேறு கேள்விகள் எழுதிக் கேட்க வேண்டியதுதான்.

—ஆர்வி.]

**எஸ். டி. எஸ். பரமேசுவரன் புத்தூர்**

கே: பாரதியார் கவிதைகள்...

ப: மனித உள்ளங்களை இணைக்கும் பெரிய பாலம்.

**ஆர். கலியபெருமாள், நெல்லித் தோப்பு**

கே: உரக்கப் படிப்பது நல்லதா, வாய்க்குள்ளாகவே படிப்பது நல்லதா?

ப: சிறிய வகுப்புகளில் படிக்கும் சிறுவர்கள் வாயைவிட்டு உரக்கப் படிப்பதுதான் நல்லது. வயதான பிறகு, வகுப்பு உயர உயர வாயைவிட்டுப் படிப்பது சரியல்ல. வாய்க்குள்ளாகப் படிப்பதே மனத்தில் பதிய உதவும்.

**எம். கே. ராமகிருஷ்ணன், கோடம்பாக்கம்**

கே: இந்தியாவில் மிகப் பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலம்..

ப: பல உண்டு. அவற்றில் வாரணசி என்ற காசி முக்கியமானது.

**வி. ஆர். சுந்தரராஜன், புனா.**

கே: கண்ணனில் தாங்கள் எழுதப் போகும் அடுத்த தொடர் கதையின் பெயர் என்ன?

ப: அதுதான்....?....

**கே. எஸ். ராஜன், பூவை**

கே: எங்கள் ஊருக்குச் சாலை வசதி இல்லை. முதல் அமைச்சருக்கு எழுதினோம். பதில் இல்லை. என்ன செய்வது?

ப: உங்கள் ஊர்வாசிகள் அனைவரும் சேர்ந்து ஜில்லா போர்டு தலைவருக்கு எழுதவேண்டும்.

**வீரவாசன், ஸ்ரீரங்கம்.**

கே: தங்கள் காரியாலயத்துக்கு நான் திடீரென்று விஜயம் செய்தால் என்னை எப்படி வரவேற்பீர்கள்?

ப: வாசலிலேயே உன் விஜயத்துக்குக் காரணம் கேட்பான் ஒரு காவற்காரன். அதை வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டால் என் வரவேற்பே தேவையில்லை. வரலாம்; உட்காரலாம்; இஷ்டமிருந்தால் பேசலாம்; இல்லாவிட்டால் எழுந்து போகலாம்!

**கா. வேலுசாமி, காசிபாளையம்.**

கே: ஹிந்தி தேசீய மொழியாவதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: என் கருத்துக்குக் காத்திராமலே அது தேசீய மொழியாகிவிட்டது. எந்த மொழியையும் வெறுக்காமல் கற்பது நல்லது.

**ஸி. ரகோத்தமன், குடியேற்றம்.**

கே: உலகிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை எது?

ப: ரீடர்ஸ் டைஜஸ்ட் என்னும் அமெரிக்க மாதப் பத்திரிகை.

**பெ. லாசரஸ், சிலுவைபுரம்.**

கே: தற்காலத் தமிழருக்கு வேண்டியது என்ன?

ப: சரியான வழி நடத்திச் செல்லும் தலைவர். அப்படி ஒருவர் இருந்தால்தான் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்கிற பாரபட்சம் காட்ட எவரும் துணியமாட்டார்கள்.

**தி. த. வள்ளுவதாசன், சென்னை-2.**

**கே:** ஞாபகசக்தி எனக்குக் குறைவாக இருக்கிறது. அதை விருத்தி செய்ய என்ன செய்யலாம்?

**ப:** உடல் வேர்த்துக்கொட்டும்படி விளையாடு. அல்லது தேகப்பயிற்சி செய். உடம்பில் உள்ள சோம்பல் போனால் சுறுசுறுப்பு உண்டாகும். ஞாபகசக்தியைத் தருவதற்குச் சுறுசுறுப்புதான் முதல் படி.

**பி. சுப்பராயலு, திண்டுக்கல்.**

**கே:** ஒரு பிரயாணி இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பலில் செல்ல எத்தனை நாள் பிடிக்கும்; விமானத்தில் செல்ல எத்தனை நாள் பிடிக்கும்?

**ப:** கப்பலில் செல்ல 21 நாட்கள் பிடிக்கும். விமானத்தில் 45 மணி நேரம் பிடிக்கும்.

**எஸ். எம். எம். நிலாம், கொழும்பு-12.**

**கே:** சிறந்த பேச்சாளர், சிறந்த எழுத்தாளர் இவர்களில் யாருக்கு நீங்கள் மதிப்புத் தருவீர்கள்?

**ப:** சிறந்த எழுத்தாளருக்குத்தான். ஆயினும் எதிலும் சிறந்தவர்களுக்கு நான் மதிப்புக் காட்டத் தவறமாட்டேன்.

**ஆ. சாலமன்ராஜா, ஷேக்கல்முடி.**

**கே:** ஒருவன் எத்தகையவன் என்று அவனுடைய நண்பர்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடியுமா? அவனுடைய பழக்க வழக்கங்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடியுமா?

**ப:** பழக்க வழக்கங்களைக் கொண்டு சுமாராக, கிட்டத்தட்டச் சரியாக அறிந்து கொள்ளலாம். நல்லவனுக்கு நாலு பேரும் நண்பர்களாக இருக்கக் கூடும்.

**கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்.**

**கே:** எனக்குச் சிறுகதைகள் எழுதத் தெரியும். எழுதினால் கண்ணனில் இடம் பெறுமா?

**ப:** இப்படி எழுதிக் கேட்கிற பலரை எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் கதை கண்ணனுக்கு ஏற்றதாக இருக்குமா என்பதே என் கவலை.

**வே. ரங்கநாதன், புவனகிரி.**

**கே:** எதைப் பெறக் கூடாது? எதை இழக்கக் கூடாது?

**ப:** அகந்தையைப் பெறாதே; அன்பை இழக்காதே!

**எஸ்: செல்லம், மதுரை.**

**கே:** ஒரு கண்ணாடிக்கு முன்னால் நின்று நம்மை நாமே போட்டோ எடுத்துக்கொள்ள முடியுமா?

**ப:** ஒளி சரியாக இருந்தால் முடியும்.

**ப. ருக்மிணி, அத்தியூர் காலனி.**

**கே:** மூட்டை என்ற புனை பெயருடைய ஒருவர் உண்டா, அல்லது வெறும் மூட்டையா?

**ப:** மூட்டை என்று அவரை உரக்கச் சொல்லாதே. மாணவராக இருந்தபோது கண்ணனுக்குப் படம் போட்டு அனுப்பத் தொடங்கிய அவர் இப்போது ஒரு மின்சார எஞ்சினியரான பிறகும் தொடர்ந்து தம் பணியைச் செய்கிறார். கேட்டாலே உனக்கு 'ஷாக்'காக இருக்கிறதா?

**கே. இலக்குமணன், திட்டக்குடி.**

**கே:** பள்ளி மாணவனுக்கு வேண்டியது படிப்பா, பணமா?

**ப:** இந்தக் காலத்து மாணவனுக்குப் படிப்பைவிடப் பணம் அதிகமாக வேண்டியிருக்கிறது! அப்படி இருப்பதனால்தானே உனக்கு இப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்று தோன்றியிருக்கிறது!

**எஸ். நாராயணன், கல்கத்தா-29.**

**கே:** என் கையெழுத்தைக் கொண்டு என் வயதை உங்களால் சொல்ல முடியுமா?

**ப:** முடியும். உன் வயது பன்னிரண்டுதானே? எப்படிக் கண்டு பிடித்தீர்கள் என்று கேட்கிறாயா? கேள்; அதற்குப் பிறகு பதில் சொல்கிறேன்.

**எஸ். ராதாகிருஷ்ணன், தஞ்சை.**

**கே:** கடிகாரப் பெண்டுலத்தில் உள்ள குண்டைக் கீழே இறக்கினால் வேகம் குறையுமா, அதிகரிக்குமா?

**ப:** வேகம் குறையும். குண்டு மேலே ஏற ஏறப் பெண்டுலம் வேகமாய் ஆடும். கீழே இறங்க இறங்க வேகம் குறையும்.




## உலகம் போற்றும் உத்தமன்

உலகம் போற்றும் உத்தமன்!
விலையி லாத ரத்தினம்!
கலக மின்றி வென்றிடும்,
கருணை நெறியைக் கண்டவன்.

பலமு றைகள் சிறையிலே,
பாடு பட்டுப் பொன்னுடல்
நலமி ழந்த போதிலும்,
நலிவு றுத நெஞ்சினன்!

சத்தி யத்தின் புத்திரன்!
சமர சத்தின் மித்திரன்!
கத்தி யின்றி வெள்ளையர்,
கப்ப லேறச் செய்தவன்.

நூலை ராட்டை மூலமாய்,
நூற்று நாட்டில் கதரினுல்,
சேலை வேட்டி நெய்திடச்
சொல்லித் தந்த நல்லவன்.

மாந்த ருக்கு இறையிவன்!
மங்கி டாத சுடரொளி!
சாந்த மூர்த்தி யாமவன்,
காந்தி யென்னும் புண்ணியன்!

—ஜி. தமிழ்ச்செல்வன்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கனகாபிஷேகக் காட்சி



ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளுக்குப் பட்டத்து இளைய சுவாமிகள் பொன்னோடு மலர் சேர்த்துப் பூஜிக்கும் காட்சி

போட்டோ: வி. சுப்பிரமணியன்

---

## கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம். பலர் டுகோளுக்கிணங்க தொடர்கதை அனுப்ப வேண்டிய தேதியை லம் தள்ளிப் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

னைகள்:—

. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் எழுத வேண்டும்.

கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் மல் இருக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக ட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

. குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து ளலாம்.

6. முடிவுத் தேதி 31-10-'57.

—ஆசிரியர்